சூரிய நாராயண சாஸ்திரியார் நாட்டின் நாகரிக வளர்ச்சிக்கேற்பச் சொற்களும், ஏற்படும் பாஷை (மொழி)களும் நாகரிகம் விளைவித்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிற சொற்களின்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ்மொழிக்குப் பொருந்துவனவாகும் என்று தமது நூலில் குறிப்பிடுகின்றதைச் (History of the Tamil language, p. 95) T.R. சேஷ ஐயங்கார் தனது திராவிட இந்தியா (T.R. Sesha Iyengar Dravidian India, p. 77) என்ற நூலில், தமிழ் ஒரு மூலமொழி, தனித்தியங்கும் மொழி என்று வலியுறுத்துகின்றார். மேலும், சூரிய நாராயண சாஸ்திரியார், தெலுங்கிற்குத் தாய் தமிழ் என்று ஆந்திர சப்தத்துவம் என்ற நூலில் சேஷகிரி சாஸ்திரியார் மொழிந்துள்ள கருத்தை எடுத்துக் கூறித் தமிழின் தனித்தன்மையை நிறுவுகிறார் (ப. 26).

திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற தமது நூலில் கால்டுவெல் ஐயர், தமிழ் மொழியிலிருந்து வடமொழிச் சொற்களை நீக்கிவிட்டால், எஞ்சியிருக்கும் பழம் பெரும் சிறப்பு வாய்ந்த திராவிடச் சொற்கள் ஆரியக் கலப்பற்ற திராவிட நாகரிக வாழ்க்கை முறையை உணர்த்தவல்லன (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், கால்டுவெல் ஐயர், ப.146) என்று தமிழின் தனித்தன்மையை 19ஆம் நூற்றாண்டில் வரையறுத்துள்ளார்.

மிகவும் பழமையான சிந்துவெளி நாகரிகமும் தமிழ் நாகரிகமும் திராவிட நாகரிகத்தின் அடிப்படையே என்று ஹீராஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். உலகின் முதல்மொழி தமிழ் மொழியே. தமிழ் மொழியினின்றே செமிட்டிக் இன மொழிகளான எபிரேயம், அக்காடியம், எகிப்தியம், கானானியம், ஃபோனீயம் போன்றவை கிளைத்தன என்று எபிரேயத்தின் தாய்மொழி தமிழே என்ற நூல் (ம.சோ.விக்டர். 2005) வரலாற்று மொழியியல் ஆய்வு அடிப்படையில் விளக்குகிறது.

தமிழ்மொழி தொன்மைக்காலத்திலிருந்தே தனக்கென்று ஒரு தனிவடித்தைப் பெற்றிருந்தது. உயிர் 12, மெய் 18, சார்பு 3 ஆக முப்பத்து மூன்று என வகுக்கப்பட்டுள்ளது. இத்தன்மை இவ்வெழுத்துக்கள் பல ஒலிகளை உணர்த்திக் காட்டும் சிறப்புத் தன்மைக்கு வழிவகுத்துள்ளது. குறைந்த எண்ணிக்கையின் துணையுடன் அதிக ஒலி வகைகளை உணர்த்துகிறது. கி.மு.350 என்று கருதப்படும் தொல்காப்பியம் தனக்கு முன்பிருந்த அகத்தியத்தைச் சுட்டுகிறது. அவ்வாறெனில் தொன்மைக் காலத்தே இது வரி வடிவத்தைப் பெற்று விளங்குகிறது என்பன போன்ற கருத்துக்கள் மொழியியல் அறிஞர்களின் ஒட்டுமொத்தக் கருத்துக்களாகும்.

மேலும் எஸ். வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ, எஸ்.கே.சட்டர்ஜி, எஸ்.கே.பிள்ளை போன்றோர் தமிழின் தனித்தன்மைகளைச் (வரிவடிவம் பெற்றது, மூலமொழி, திருந்திய மொழி, தனித்தியங்கும் ஆற்றலுடையது) சுட்டியுள்ளனர். தமிழ்மொழி திருந்திய வடிவம் பெற்ற தொன்மைத் தன்மை உடைய இலக்கண இலக்கிய வளமுடைய செம்மொழி என்பது மொழியியல் வல்லுநர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

கிரேக்க மொழியும் தொன்மைத் தன்மையும்

தொன்மைத் தன்மையும், இலக்கண இலக்கியப் பாரம்பரியமும் உடைய மொழிகளே செவ்வியல் மொழிகள் (classical languages) என்றழைக்கப்பட்டன.

ஒரு மொழியின் அம்மொழி இலக்கியத்தின் தொன்மைத் தன்மையை அறிய அந்நாட்டின் நாகரிகத்தோற்றம், அடிப்படைச் சான்றாக அமையும் என்பர் வரலாற்றறிஞர்க்ள். ஐரோப்பிய மொழிக்குடும்பத்தில் கிரேக்கம் ஓர் உட்பிரிவாகும். கிரேக்கத்தின் தாய்மொழி ஆர்க்டோ-சைபீரியன் மொழியாக இருக்கக்கூடும் என்று மொழியியலறிஞர்கள் கருதுகின்றனர்.

ஐரோப்பிய மொழிக்குடும்பத்தில் ஓர் உட்பிரிவு கிரேக்க மொழியாகும். முன்பு கிரீஸ் என்றழைக்கப்பட்டுப் பின்புதான் கிரேக்கம் என்றாகியது. உலகமொழிகளில் தொன்மையானது கிரீஸ் ஆகும். கிரீஸ், கிரேக்கர் என்பது உரோமர்கள் இட்ட பெயர்களாகும். கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பு (சுமார் கி.மு.5 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு) கிரீஸைச் சார்ந்த யூபியா என்ற பிரதேசத்து கிரையி (Crai) என்ற ஜாதியினர் இத்தாலியின் மேற்குப் பக்கத்தில், நேப்பிஸில் குடியேறினர். இவர்களைக் கிரேக்கர்கள் என்று அழைத்தனர். இவர்கள் இதன் பிறகு எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தார்களோ, அந்தப்பிரதேசம் முழுமையும் கிரீஸ் என்று அழைக்கப்படலாயிற்று. அங்கு வசித்த அனைவரும் கிரேக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

முன்பு கிரீஸிற்கு ஹெல்லாய் என்ற பெயர் இருந்தது. கிரேக்கத்தின் மூத்த சந்ததியினர் ட்யுக்கோலியன், பிக்ரா என்ற இருவர் ஆவர். இவர்களின் மகன் ஹெல்லன் ஆவான். இவன் வழிவந்தவர்கள் ஹெலன்னீயர்கள். இவர்கள் வசித்த பிரதேசம் ஹெல்லாய் ஆகும்.

ஹெல்லனுக்கு இயோஸை, டோரஸ் என்ற இரண்டு பிள்ளைகள், அயோன், அக்கீஸிஸ் என்ற இரண்டு பேரப்பிள்ளைகள் இருந்தனர். இவர்கள் சந்ததியினர் தான், கிரேக்கர்களுக்குள்ள நான்கு பிரிவினராகிய அயோலியர், டோரியர், அயோனியர், அக்கீயர் ஆவர்.

கிரேக்க நாகரிகம்

இந்நான்கு பிரிவுகளினடிப்படையில் தான் கிரேக்க வரலாறு பிரிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு பிரிவினருள் ஒருவரான அக்கீயர்கள் பெலாப்பொனேசியாவுக்கு வந்து தங்களை வளப்படுத்திக் கொண்டனர். இவர்கள் பெலாஜ்ஜிய மைசீனியர்களுக்குத் (பெலாப்பொனேசியாவிலிருந்த ஆதி குடிகள்) தங்கள் பண்பாடு, மொழி முதலியவற்றைக் கொடுத்து அவர்களுடன் கலந்தனர். கி.மு.1250இல் பெலாஜ்ஜியர்களை அக்கீயர்கள் ஆளும் சாதியினராயினர். இந்த ஐக்கியத்திலிருந்துதான் கிரேக்க நாகரிகம் ஆரம்பமாயிற்று என்பார் வெ.சாமிநாதசர்மா (கிரீஸ் வாழ்ந்த வரலாறு. பக். 24-30).

இந்நான்கு குழுவினரும் பேசிய மொழிகள் கிரேக்க மொழிகள் என்றே அழைக்கப்பட்டன. இந்த நான்கு கிரேக்க மொழிகளும் 24 எழுத்துக்களுடன் ஒரே வடிவத்தைத்தான் பயன்படுத்தின. பின்பு அயோனிக் கிரேக்கம் ஆதிக்கம் செலுத்தி ஏனைய மூன்றையும் பின்னுக்குத் தள்ளியது என்று கிரேக்க இலக்கிய வரலாறுகள் சுட்டுகின்றன. மேலும் கிரேக்கத்தில் முதன் முதல் எழுந்த ஹோமரின்

காப்பியங்கள், அயோனிக் வட்டத்தில் எழுதப்பட்டதால் இக்காப்பியங்கள் அயோனிக் காப்பியங்கள் என்று குறிப்பிடும் தன்மையும் இங்கு நினைவு கூரத்தக்கது. ஆதலால் செவ்வியல் மொழியான கிரேக்கம் பல வட்டார மொழிகளுக்கும் (Vernacular languages) இடம்கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. கி.மு.13இன் இடைக்காலத்திலிருந்தே கிரேக்க நாகரிகத்தை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே கிரேக்கத்தின் நாகரிகத் தோற்றத்தை ஒட்டி, கிரேக்க மொழி கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே தோன்றி வளர்ந்த தொன்மைத் தன்மையும் இலக்கணப் பாரம்பரியமுமுடையது என்று வரலாற்றுத் திறனாய்வாளர்கள் கணிக்கின்றனர். எனவே செம்மொழிப் பண்புகளின் அடிப்படை இயல்புகளை,

1. நாகரிகம் தோன்றிய தொன்மைக்காலத்தில் தோன்றியது
2. சிறந்த இலக்கண இலக்கிய வளமும் பண்பாட்டுப் பாரம்பரியமுமுடையது
3. திருந்திய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது
4. திருந்திய மொழிக்குடும்ப மொழிகளுக்கு மூலமொழியாகத் திகழ்வது
5. திருந்திய வரிவடிவ அமைப்பை உடையது
6. தனித்தியங்கும் ஆற்றலுடையது
7. பல வட்டார மொழி வளர்ச்சிக்கு இடமளிக்கும் தன்மையுடையது
8. எண்ணற்ற ஒலி வகைகளைத் தன்னகத்தே கொண்டது
9. எழுத்து முறையைத் தோற்றுவித்த பெருமை உடையது

என்ற வரையறைக்குள் அடக்கலாம்.

தமிழும் வீரயுகமும் (கி.மு. 2 கி.பி.3)

வீரயுகத்தில் காலத்தால் முந்தியது கிரேக்க வீரயுகமாகும். தமிழரது வீரயுகம் புராதன சுமேரியர், கிரேக்கர் முதலியோரின் வீரயுகங்களுடன் ஒரு சேர வைக்கும் தன்மையுடையது என்பார் க.கைலாசபதி. காலவரிசையில் பழந்தமிழரது வீரயுகம் கிறித்துவிற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் தொடங்கி இருக்கலாம். கி.மு.6 ஆம் நூற்றாண்டளவில் இது நிகழ்ந்திருக்கலாம் என்பார் கைலாசபதி (ஒப்பியல் இலக்கியம், ப. 71).

தமிழில் வீரயுகக் காலம் என்பது சங்ககாலம். வீரயுக இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். இவை கிரேக்க வீர

யுகத்துடன் ஒப்பிடற்பாலன. சங்க, கிரேக்க, வீரயுக இலக்கியங்களில் ஒத்த பண்புகள் காணப்படுகின்றன என்று வீரயுகம் பற்றி எச்.எம்.சாட்விக், எஸ்.எம்.மார், எஸ் கிருஷ்ணசாமி ஐயங்கார், என்.கே.சித்தார்த்தா, எஸ். வையாபுரி பிள்ளை, க.கைலாசபதி, தமிழண்ணல், கதிர்மகாதேவன், ஜான் சாமுவேல் போன்ற பலரும் சுட்டியுள்ளனர்.

அறிஞர்களின் கருத்தாக்கங்களின்வழியே தமிழும் கிரேக்கமும் வீரயுகமே என்று மறுபடியும் எடுத்துக்காட்டுவது இங்கு நோக்கமன்று. 'தமிழ், கிரேக்க வீரயுகக் கருத்துக்கள் செவ்வியல் பண்புருவாக்கத்திற்கு, உயர்குடிச் சமுதாய உருவாக்கத்திற்கு எவ்வாறு அடிகோலின என்பதை எடுத்துக்காட்டும் முயற்சி' இங்குக் குறிப்பிடத்தக்கது.

வீரயுக இலக்கியங்கள் என்று கருதப்படும் தமிழ்ச் சங்க இலக்கியங்கள் நாட்டுப்புற இலக்கியங்களிலிருந்தே தோன்றியுள்ளன. இவ்வீரயுகப் பாடல்களில் நாட்டுப்புறத்தன்மைகள் படிந்துள்ளன. இதைப் பலரும் நிறுவியுள்ளனர். இங்கும் உயர்குடி மக்கள் பாடுபொருளாக்கப் பட்டுள்ளனர் (உயர்குடி மக்கள் எனப்படுபவர் தொல்காப்பியம், சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் தான்). அவர்களின் சமுதாய வாழ்வியல், வீரம், புகழ், பிறப்பு, இறப்பு, வெறியாட்டம், நிலையாமை, அன்பு, காதல், நட்பு என்று மானுடம் தழுவிய பொதுமைக் கருத்துக்கள் பாடுபொருள்களாக்கப்பட்டன. அதே நேரம் சங்க காலத்தில் இனக்குழு மக்கள் வாழ்க்கையும் சுட்டப்படுகிறது. சங்க கால மக்கள் மலையிலிருந்து மெல்லக் காடு, வயல், கடலோரங்களில் பரவி வாழ முற்பட்டுள்ளனர். பழந்தமிழர் நாகரிகம் உருவாகிய காலக்கட்டம் சங்க காலமாகும். எனவே இனக்குழு மக்கள் வாழ்விடங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள் முதலியவை சுட்டப்படுகின்றன.

இனக்குழுச் சமுதாயத்தில் விருந்து பேணும் இயல்பு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

> . . . மனைவியும்
> வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது
> படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
> விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் விதவை
> யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு
> வருவிருந் துஅயரும் விருப்பினள் (புறம். 326)

என்ற பாடல் சிற்றூர்த் தலைவி வேட்டையாடிக் கொண்டு வந்த உடும்புக்கறியைத் தயிரோடு சேர்த்துக் கொடுத்து விருந்து பேணும் திறனைச் சுட்டுகிறது.

அதே நேரம் உயர்குடி மக்கள் உருவாக்கமும் சங்க இலக்கியத்தில் மிகுதியும் பேசப்பட்டுள்ளது.

அறம்புரி அந்தணர் வழிமொழிந்தொழுகி
ஞாலநின்வழி ஒழுகப் பாடல் சான்று
நாடுடன் விளங்கு நாடா நல்லிசைத்
திருந்திய வியன் மொழித் திருந்திழை கணவ (பதிற்றுப். 24)

என்று பதிற்றுப்பத்து, அரசர்கள் அந்தணர்கள் வழி நடந்தனர்; அவ்வாறு நடந்தால் உலகமே அரசனை ஏத்தி வணங்கும்படியான நல்ல புகழை அடைவர் என்கிறது.

சங்க இலக்கியங்களில் நாட்டுப்புற மரபுகள்தான் இலக்கிய மரபு களுக்கும், வடிவச் செம்மைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. எனவே 'செவ்வியல் காலம் என்ற இலக்கிய மரபுத் தோற்றம் இனக்குழுச் சமுதாயத் தாக்கமும், உயர்குடிச் சமுதாய உருவாக்கமும் இணைந்த நிலையில்தான் அமைந்துள்ளது' (செ. சாரதாம்பாள், செவ்வியல்) என்று உறுதிப்படுத்த முடிகிறது. இனக்குழு வாழ்க்கை முறை அழிந்து நிலவுடைமையாக மாறுகின்ற சூழலே சங்க காலச்சூழல் என்ற கா.சுப்பிரமணியன், கா.சிவத்தம்பி, பெ.மாதையன் போன்றோர் கருத்துக்கள் இவண் ஒப்புநோக்கத்தக்கன.

கிரீஸின் வீரயுகமும் செவ்வியல் மரபுத் தோற்றமும் (கி.மு.1330-1100)

கிரீஸின் வரலாறு கி.மு. 1300லிருந்து ஆரம்பிக்கிறது. கி.மு.1300இலிருந்து கி.மு 1100 வரை உள்ள இருநூறு வருடக் காலத்தைத்தான் வரலாற்றாசிரியர்கள் வீரயுகம் என்று அழைக்கின்றனர். (வெ.சாமிநாத சர்மா, கிரீஸ் வாழ்ந்த வரலாறு) இக்காலக் கட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகள், வாழ்வியல் செய்திகள், பழக்க வழக்கங்கள், வீரமரபுகள் முதலியவற்றைப் பொருண்மைகளாகக் கொண்டு நாடோடிப் பாடல்கள் பாடப்பட்டன. தொன்மைக்காலத்தில் பாணர்கள் (Bards) என்ற ஒரு பிரிவினர் கையில் இசைக்கருவிகளுடன் ஊர் ஊராய்த் திரிந்து பாட்டுப் பாடிப் பிழைத்தனர்.

இவர்கள் இசைக்கருவிகளை இசைத்து இனிய குரல் வளத்துடன் பாடினர். பொது மக்களிடமும், அரசவைகளிலும் இவர்களுக்கு நல்ல

வரவேற்பு இருந்தது. போர் நடைபெறும் காலங்களில் இவர்கள் போர்க்களத்திற்கு அரச ஏவலாளர் வழி அழைத்துச் செல்லப்படுவர். போரில் புண்பட்டுக் களைத்துப் போன வீரர்கள் முன்னிலையில் இவர்கள் இசையுடன் பாடினர். பல புராணக் கதைகள், வீரமரபுக் கதைகள், தலைவனைப் பற்றிய கதைகள், வீரதீரச் செயல்களைப் பாடல்களாக இசைத்துப் பாடினர். கிரேக்கர்களுக்குக் கதை, இசையுடன் கூடிய பாடல்களைக் கேட்கும் ஆர்வம் அதிகமாக இருந்தது. கதைப் பாடல்களை விரும்பிக் கேட்டனர். இதனால் மக்களிடையே இக்கதைப் பாடல்களுக்கும் பாணர்களுக்கும் செல்வாக்கு இருந்தது. இப்பாடல்கள் எல்லாம் தாம் கண்ட அனுபவங்களை நினைவில் நிறுத்திப் பாடியவையாகும். இப்பாடல்கள் தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக அவரவர் குடும்பத்தினரைச் சேர்ந்தவர்களால் பாடப்பட்டன. அதனால் தான் உலகமொழி இலக்கியங்களில் சிறப்பாகத் தமிழ், கிரேக்க மொழி இலக்கியங்களில் வாய்மொழி இலக்கிய மரபைப் பின்பற்றி முதன் முதல் எழுந்த தொன்மையான வரிவடிவ இலக்கியங்களில் பாணர் பரம்பரையினர் மிகுதியாகச் சுட்டப்படுகின்றனர்.

மேலும் இந்த வாய்மொழிப் பாணர்கள் நினைவில் நிறுத்திப் பாடிய பாடல்களில் தம்பெயரைக் குறிப்பிடவில்லை. அதனால் வாய்மொழிப் பாடல்கள், மானுடப் பொதுமையை முன் நிறுத்தின. அதாவது அக்கால வீரமரபுச் செய்திகள், அரசர்களின் போர், வீரம், புகழ், காதல்,வெற்றி, பிறப்பு, இறப்பு, களியாட்டம், அறிவுரைகள், விருந்து முதலிய அடிக் கருத்துக்கள் பொதுமைப்படுத்தப்பட்டன (எ.டு.விருந்தைக் குறிப்பிடலாம்). இக்கருத்துக்கள் வரிவடிவ இலக்கியத்தில் இலக்கிய மரபிற்குட்படுத்தப்பட்டன. வடிவச் செம்மைப்படுத்தப்பட்டன. இவ்வடிப்படையில் தான் ஹோமரின் இலக்கியங்கள் பாணர்கள் வாய்மொழியாகப் பாடிய பாடல்களைத் தொகுத்துத் தகுந்த உருவம் கொடுத்துக் காப்பியமாக்கியவை என்பர். கிரேக்கக் கருத்துக்களை ஆராய்ந்த மில்மன்புரியும் நாட்டுப்புறப் பாடல் மரபுகள் கிரேக்கக் காப்பியங்களில் மிகுதியும் படிந்துள்ளன என்று குறிப்பிடுகின்றார். இங்ஙனம் வாய்மொழி இலக்கியப் பண்புகளின் தாக்கமும் வரி வடிவ இலக்கியத் தொடர்ச்சியும் ஒன்றுபடும் நிலையில்தான் செவ்வியல் இலக்கியங்கள் பிறந்துள்ளன. அவ்விலக்கியங்கள் தோன்றிய தொன்மைக் காலத்தை, வரிவடிவ இலக்கியக் காலத் தொடக்கத்தைத் தான் செவ்வியல் காலம் (Classical Age) என்று உலகமொழி இலக்கிய வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

சங்க, கிரேக்க வீரயுக ஒப்பீடு

தமிழ் வீரயுகம் சுமார் ஆறு, ஏழு நூற்றாண்டுகளை உள்ளடக்கித் தான் குறிப்பிடப்படுகிறது. கிரேக்க வீரயுகத்தில் (சுமார் 20 நூற்றாண்டுகள்) நாட்டுப்புறப்பாடல்கள்தான் வழக்கில் இருந்தன. அவற்றைப் பின்பற்றிக் கிரேக்கக் காப்பியங்கள் எழுந்துள்ளன. தமிழ் வீரயுகத்தில் நாட்டுப்புறப் பாடல்களைப் பின்பற்றி எழுந்த தமிழ்ச் சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் வீரயுக இலக்கியங்களாகக் குறிப்பிடப் படுகின்றன. இரண்டு இலக்கியங்களிலும் உயர்குடிமக்கள் பாடுபொருளில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிரேக்கத்தில் காப்பிய இலக்கியம் முதலான செவ்வியல் இலக்கியங்கள் உயர்குடியினருக்காக உருவாக்கப்பட்டன. மேலும் ஏதென்ஸ் நகரில் செல்வக் குழந்தைகளைச் செவிலியரே வளர்த்தனர். வீட்டு முற்றங்களில் பெண்கள் பாவைகளை வைத்து விளையாடி, ஊஞ்சலாடி, மகிழ்ந்து, பொழுதுபோக்கினர். சிறுவரின் விளையாட்டுப் பொருட்களாகப் பந்து, வலை, பம்பரம், சிறுதேர் ஆகியவை காணப்படு கின்றன என்று டக்கர் குறிப்பிடுவதாக இலக்கியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர். எவ்வாறாகினும் இனக்குழுச் சமுதாயத் தாக்கமும், உயர் சமுதாய ஆதிக்கமும் இணைந்த நிலையில்தான் செவ்வியல் இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன எனலாம்.

ஹோமர் தம் காப்பியங்களில் நாட்டுப்புறப் பழக்கவழக்க மரபுகளைத் தொகுத்துப் பாடியுள்ளதால்தான் இவற்றை வீரயுகக் காப்பியங்கள் என்று சுட்டுவர். நாட்டுப்புற மரபுகளை அடிப்படையாகக் கொண்டுதான் செவ்வியல் இலக்கியங்களில் தொன்மத்தன்மை, மரபுடைமை, மானுடத்தை மையப்படுத்தும் பாடுபொருள், வெளிப்படுத்தும் முறையில் உலகப் பொதுமை தழுவிய மனித நேயம், உயர்குடி மக்களுக்காக எழுதப்படுவது போன்ற செவ்வியல் இலக்கிய மரபுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

கிரேக்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களில் பெயர்சுட்டும் பண்பு உள்ளது. ஆனால் தமிழில் தொல்காப்பியர் அகப்பாடல்களில் சுட்டி ஒருவர்பெயர் கொளப் பெறாஅர் என்ற விதியாகவே வகுத்துள்ளார். இது தமிழ் மரபு. சங்க அகப்பாடல்கள் முழுவதும் இம்மரபைப் பின்பற்றுவதால், உலகப் பொதுமைப் பண்பு இன்னும் சிறப்படைகிறது. ஆனால் கிரேக்க இலக்கியத்தில் காதல் தன்னுணர்ச்சிப் பாடல்களில் பெயர் சுட்டப்படுவதால் அங்கு உலகப் பொதுமை இல்லை என்பது

பொருளன்று. மானுடம் தழுவிய பாடுபொருட்களில் உலகப் பொதுமை மையப்படுத்தப்படுகிறது.

சங்க இலக்கியமும் தொன்மச் சார்பும்

சங்க இலக்கியங்கள் தனிப்பாக்களாக அமைந்துள்ளதால் இவற்றில் உத்தியாகவும், உவமையாகவும், தெய்வங்கள் பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஆனால் பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் தனித்தனித் தெய்வங்கள் (முருகன், திருமால்) பற்றிய தொன்மச் செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. இவை தவிர இராமாயணக் கதைகளும், அகம், புறம், பதிற்றுப்பத்து, கலித்தொகை முதலியவற்றில் இடம்பெறுகின்றன. பெண்தெய்வங்களாகக் கொற்றவை (போர்க்கடவுள்), கொல்லிப் பாவை, அணங்கு முதலியவை காட்டில் உறையும் தெய்வங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

முருகன் சீற்றத்து உருகெழு குரிசில் (புறம்.16)

என்று புறம் முருகன் சீற்றத்தைத் தலைவனின் சீற்றத்துக்கு ஒப்பிடுகின்றது.

வெறி என உணர்த்த உள்ளமொடு
மறி அடுத்து அன்ன அயரும் (நற்.4)

என நற்றிணைப் பாடல் முருகனுக்கு ஆடுபலியிட்டு வழிபட்டதைக் குறிப்பிடுகிறது. இங்கு முருக வழிபாடு வெறியாடல் என்ற சமுதாய நிகழ்ச்சியாகவே இடம்பெற்றுள்ளது. சாமிசிதம்பரனார் இதனை முன்னோர் வழிபாடு (பழந்தமிழர் வளர்ச்சியும் வாழ்வும் ப.36) என்றே குறிப்பிட்டுள்ளார்.

பரிபாடலில் முருகனைப் பற்றி எட்டுத் தனிப்பாடல்களும் (5,8,9,14,17,19,21) திருமாலைப் பற்றியும் தனிப்பாடல்கள் அமைந்துள்ளன.

ஆதியந்தணன் அறிந்துபரி கொளுவ
வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து
. . . .
உமையொடு புணர்ந்த காமவதுவையுள்
அமையாப் புணர்ச்சி அமைய நெற்றி
இமையா நாட்டத்து ஒருவரங் கொண்டு
விலங்கென விண்ணோர் முதல்வன்
கடவுள் ஒருமீன் சாலினி யொழிய
அறுவர் மற்றையோரு மந்நிலை அயின்றனர்
மறுவறு கற்பின் மாதவர் மனைவியர் (பரிபாடல் 22-30)

என்று கடுவனிளவெயினனாரின் பரிபாடலில் முருகன் பிறப்பு சுட்டப்படுகிறது. இங்குச் சிவன் உமையை வதுவை செய்த காலத்தில், இந்திரன் வேண்டிக் கொண்டபடி, சிவன் தப்பானாகிப் புணர்ச்சி தவிர்த்து, கருப்பத்தை இந்திரன் கையில் கொடுக்க, அதை இறைவன் கூறாகிய முத்தீக்கட் இருடிகள் உணர்ந்து, தமக்குத் தரித்தல் அரிதாகையால் அதை இட்டுச் சக்தி குறைந்த கருப்பத்தை முனிவர் எழுவரும் தம் மனைவியர் கையில் கொடுக்க அருந்ததி தவிர மற்ற அறுவருக்கும் சூல்முதிர்ந்து வளர்ந்தது என்று நச்சினார்க்கினியர் முருகன் பிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

திருமுருகாற்றுப்படையில் முருகனது பிறப்புச் செய்தி, ஆறுமுகங்கள், பன்னிரு தோள்களின் உருவகக் காட்சி, சூர் கடிந்தது, மாமரம் வெட்டியது, அவுணரை அழித்தது, நான்முகனைச் சிறைப்படுத்தியது, திருமால், சிவன், இந்திரன் போன்ற தெய்வங்கள் நான்குமுகனுக்காக முருகனிடம் வேண்டிக் கொள்ளுதல், ஆல்கெழு கடவுள் புதல்வன், மலை மகள் மகன், வானவர் தானைத் தலைவன் போன்ற செய்திகள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இடம் பெற்றுள்ளன.

திணைநிலைத் தெய்வமான முருகன் இங்கு ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் உடையவனாகத் தோற்றப்படுத்தப்படுகிறான். மேலும் அந்தணர்கள், திருவேரகத்தில் வேதம் ஓதி வழிபடுகின்றனர். அதே நேரம் மகளிர் கடம்பத்தின் மலர்களுடன், தழையாடை அணிந்து கானவர்களுடன் தொண்டகம் என்ற சிறுபறையை முழக்கிக் குரவைக்கூத்து ஆடி வழிபடுகின்றனர். திணைநிலைத் தெய்வ வழிபாடும் அதாவது குழு வழிபாடும் உள்ளது. அந்தணர் வழிபாட்டின் வழி முருகக் கடவுள் வழிபாடு மேனிலையாக்கமும் செய்யப்பட்டுள்ளது. தமிழ் மரபு வழி முருகனின் தொன்மக்கதை சொல்லப்பட்டுள்ளது. அதாவது திணைநிலைக்கடவுள் என்ற வட்டத்தில் இருந்த நிலத்தெய்வம், பெருந்தெய்வ நிலைக்கு மேனிலையாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. முருகன் இனக்குழுச் சமுதாய வழிபாட்டு மரபிலிருந்து உயர்குடிச் சமுதாய மரபுநிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான்.

கிரேக்கச் சமயத் தொடர்பு

கிரேக்க இலக்கியங்களில், எண்ணற்ற தெய்வங்களின் பெயர்கள் பேசப்படுகின்றன. அவற்றுள் அப்போலோ (Apollo), அத்தினே (Athena), அப்ரோடைட் (Aphrodite), ஏரெஸ் (Ares), ஆர்ட்டிமிஸ் (Artemis), ஆஸ்கிலோபியஸ் (Aerusculapius), இயோலஸ் (Aeolus), கியூபிட் (Cupid), குரோனாஸ் (Cronus), டயோனியல் (Dionysus), டெமிட்டர் (Deumeter),

பொசிடோன் (Posedopn), பூளுட்டோ (Pluto), ஹீரா (Hera), ஹெர்மிஸ் (Hermes), ஹெஸ்டியா (Hestia), ஜியூஸ் (Zews) என்பவை குறிப்பிடத்தக்கன. இத்தெய்வங்கள் எல்லாம் கிரேக்கர்களின் வாழ்வில் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் இணைந்து செயல்படுகின்ற தன்மையைக் கிரேக்க இலக்கியங்களில் காணலாம். இவற்றுள் காப்பியங்களிலும், நாடகங்களிலும்தான் இத்தெய்வங்களின் செயல்பாடுகள் அதிகமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் ஹீஸியட் (Hesiod), தம் தியோகனி (Theogony)யில் முழுக்க, முழுக்கக் கலைத்தெய்வங்களைக் கண்முன் நிறுத்துகிறார்.

இவற்றுள் சில தெய்வங்களின் செயல்பாடுகள் மனித வாழ்வுடன் இணைத்துக் காப்பியங்களில் படைக்கப்பட்டிருப்பதை ஓரிரு சான்றுகள் மூலம் காணலாம்.

ஜீயூஸ் (Zews)

ஜீயூஸ் என்பவன் மலையில் வாழும் மலைத்தெய்வம் ஆகும். மலையில் உறையும் தெய்வக் கூட்டத்திற்கெல்லாம் ஜீயூஸ்தான் தலைமைத் தெய்வமாகும். இவன் கோபம், இடி, மழை, மின்னல், இவற்றுடன் தொடர்புபடுத்தப்படுகிறான். இவன் பெண்களிடம் மிகவும் எளிதாகக் காதல் கொண்டுவிடுவான். திருமணமும் செய்து கொள்வான். இந்நிலையில் இவன் திருமணம் புரிந்த பெண்கள் பலராவார். இவனுடைய வாகனம் கழுகு. மரம் ஓக் (oak) ஆகும் (G.M. Kirkwood, A. Short Guide to Classical Mythology, pp. 107-109).

பத்திமைப் பாடல்களில் (Hemeric hymns) ஒலிம்பஸ் மலைத் தெய்வங்களைப் போற்றுவதாக உள்ளது.

> **ஒலிம்பஸ் கடவுளர் புன்னகை புரிந்து**
> **உழவனின் வேலைக்கு உதவினால் தான்**
> **திணை முற்றிக் கதிர் சாயும்**
>
> (J.F. Highams C.M. Bowra, 1942, 141)

என்று கிரேக்கர்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிற்கும் கடவுளையே காரணமாக்கித் தொடர்புபடுத்துவர் (மா. செண்பகம் இராமசுவாமி, ப.171) என்று திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர்.

டயோனிசஸ் (Dionysus)

டயோனிசஸ் கிரேக்கத்தில் மதுத் தெய்வமாகும். இத் தெய்வம் கிரேக்கத் தன்னுணர்ச்சிப்பாவின் ஒருவகையான வெறியாட்டப் பாடலில்

(Dthyrams) கிரேக்கத் துன்பியல் நாடகங்களுக்கு அடிப்படையாக அமைந்தது என்பர்.

வெறியாட்டப்பாடல் என்பது டயோனிசஸ் என்ற மதுத்தெய்வத்தை வழிபடும் பொழுது நிகழ்த்தப்படும் குழுப்பாடலாகும். இக்குழுவில் ஐம்பது உறுப்பினர்கள் அடங்கி இருப்பர். இவர்கள் குதிரைக்காலும், மனித வடிவும் கொண்ட வனதெய்வக் குழுவினர் (Satyre) போல உடையணிந்துகொண்டு வட்டமாக நின்று பாடிக்கொண்டு ஆடுவர். இது சமயம் சார்ந்த சடங்காகவும் கருதப்பட்டது.

இவன் ஜியூஸ், செம்மி இருவரின் மகனாகக் கிரேக்கப் பழங் கதைகளில் குறிப்பிடப்படுகிறான். ஆனால் இவனைப் பற்றி நிறையத் தொன்மக் கதைகள் பேசப்படுகின்றன. இவன் ஹோமர் காப்பியங்களில் குறைந்தளவே பேசப்படுகின்றான். ஹோமர் இவரை ஒலிம்பஸ் தெய்வங்களுடன் இணைத்துக் குறிப்பிடவில்லை. ஹோமருக்குப் பின் இவன் வேளாண்மைத் தெய்வம், வருந்தும் தெய்வம், சிறப்பாக மதுத்தெய்வம் (a god of vegitation, a suffering god, particularly as a God of wine. The Oxford companian to classical literature, Paul, Harvey, pp. 147-149) என்று பாராட்டப்படுகின்றான். இவனுக்கு ஆடுகளைப் பலியிட்டு வணங்கிய செய்தியும் உள்ளது.

சடங்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு, ஆடுகளைப் பலியிட்டு, நோய் தீர்க்க வழிபடும் தன்மையுடையதாக உள்ள டயோனிஸஸ் என்ற கிரேக்கத் தெய்வத்தின் வழிபாட்டுத் தொடர்புடைய கருத்துக்கள் முருகனின் வெறியாட்டுப் பாடல் தன்மையை ஒத்துள்ளன எனலாம்.

பொதுவாகக் கிரேக்கச் செவ்வியல் இலக்கியங்களில் 1. இயற்கையுடன் இணைத்தும், 2.சமயச் சடங்குகள் நிகழ்த்தியும் 3.வாழ்வின் ஒவ்வொரு செயலுக்கும் தெய்வத்தைக் காரணப்படுத்தியும் 4.தெய்வத்தை மனிதர்கள் போன்று செயல்படுவதாகத் தம்முடன் மிகுதியும் தொடர்புபடுத்தியும், 5.தெய்வத்திற்குக் குடும்ப உறவுகளும் அதனுடன் பல தொடர்பான பழங்கதைகளைக் கூறியும் 6.தாம் தெய்வத்தின் பரம்பரையினர் என்று கூறிக்கொள்ளும் மரபும் போன்ற நிலைகளில் கிரேக்கச் தொன்மச் சார்பைக் காணமுடிகிறது.

கிரேக்கச் சங்க இலக்கிய ஒப்பீடு

இங்கு ஒரு வினா எழுப்புவர். அதாவது செவ்வியல் தனித்த சமயத்தைக் குறிக்காது. நடுநிலைமை உடையது என்று சமயம் குறித்த

செவ்வியல் பண்புகள் சுட்டப்படுகின்றன.அவ்வாறிருக்க, திருமால், முருகன் முதலியோரைப் பற்றித் தனித்த செய்திகள், முருக வழிபாட்டையும், திருமால் வழிபாட்டையும் முன்னிறுத்துகின்றன.

பரிபாடலும், திருமுருகாற்றுப்படையும் சமய வளர்ச்சியைச் சுட்டுகின்றன. தனித்தனிக் கடவுளர்களைச் சுட்டி, மற்ற உதிரிப்பாடல்களிலிருந்து வேறுபட்டு நிற்கும் இவற்றை எத்தன்மைக்குள் அடக்குவது. அதே போலச் சங்க இலக்கியங்களுக்குள்ளேயே காலத்தால் பின் எழுந்த கலித்தொகையிலும் கடவுளர் பற்றிய தொன்மச் செய்திகள் மிகுதியும் இடம்பெறுகின்றன. இம்மூன்றிலக்கியங்களிலும் தனித்த தெய்வங்களின் நிலைப்பாடு அதிகம் உள்ளது என்பர்.

> ஒரு குழை ஒருவன் போல், இணர்சேர்ந்த மராஅமும்
> பருதியஞ் செல்வன்போல நனை ஊழ்ந்த செருந்தியும் (கலித். 26)

என்ற பாடலில் முறையே பலராமனுக்கு வெண்கலம் மரம், சூரியனுக்குச் செருந்தி மரம், இராமனுக்குக் காஞ்சி மரம், காமனுக்கு ஞாழல் மரம், சிவனுக்கு இலவ மரம் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. இக்கருத்துக்கள் சங்க இலக்கியத்தில் மக்கள் இயற்கையையும் இறையையும் ஒன்றுபடுத்திப் பார்த்துள்ள மரபைச் சுட்டுகிறது எனலாம், இதே போன்று கிரேக்கத்தில் ஜியூஸ் தெய்வத்திற்கு உரிய மரமாக ஓக் (oak) குறிப்பிடப் பட்டுள்ளது, இவன் மலைத் தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறான். அப்பல்லோ தெய்வத்திற்குரிய நகரம் டெல்பி. அதினி (Athene) தெய்வத்திற்குரிய மரம் ஆலிவ் மரமாகும். ஆந்தை இத்தெய்வத் திற்குரிய பறவையாகும். இக் குறிப்புகள் இயற்கை இறை ஒப்பீட்டைக் காட்டுகின்றன. இச்செய்திகள் இயற்கை வழிபாட்டுச் சடங்குகள் தோன்றக் காரணமாய் இருந்தன என்ற கருத்தையும் உறுதிப்படுத்துகின்றன.

சங்க அகப்பாடல்களில் தெய்வங்கள் பற்றிய செய்திகள் ஓர் உத்தியாக இடம்பெற்றுள்ளன. பரிபாடல், திருமுருகாற்றுப்படையில் அக் கடவுள் பற்றிய புராணக்கதைகள் குடும்ப உறவுகளுக்குட்படுத்தப் பட்டு விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

கிரேக்க இலக்கியங்களிலும் இத்தகைய தன்மைகள் உண்டு. கிரேக்கத் தெய்வங்களுக்கும் குடும்ப உறவுகள் கற்பிக்கப்பட்டன. (எ.டு. ஜியூஸ் - தலைமைத் தெய்வம், இவன் மகன் டயோனியஸ், ஹெர்மிஸ்,

அவர். மகள் - அப்பல்லோ) மேலும் மனிதர்கள் தங்களைக் குறிப்பிட்ட தெய்வத்திற்குரிய பரம்பரை என்றும் கூறிக்கொண்டனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேல் ஹோமரின் பத்திமைப் பாடல்கள் (Homeric Hymns) தெய்வங்களுக்குரிய தனிப்பாடல்களாகவே விளங்குகின்றன. ஒலிம்பிக் மலைத் தெய்வம் இங்குப் போற்றப்படுகிறான். ஹோமருக்குப் பின் எழுந்த ஹிசியட்டின் தியோகனி (Theogony) கிரேக்கத் தெய்வங்களின் பட்டியலைத் தருகிறது. கலைத் தெய்வங்களின் வழிபாடு, ஜியூஸ் வழிபாடு - அப்பல்லோ வழிபாடு முதலிய வழிபாடுகளைச் சுட்டுகின்றது. எண்ணிப் பார்த்தால், கிரேக்க இலக்கியங்களில் உள்ளதுபோல் தெய்வுங்களைப் பற்றிய புராணக் கதை மரபுகள் சங்க இலக்கியத் தனிப்பாடல்களில் குறைவு எனலாம். ஏனெனில் கிரேக்கத்தில் கலைத்துறைத் தெய்வங்கள் தவிரப் பூதங்கள், அணங்குகள், சிறு தெய்வங்கள் போன்ற கணக்கற்ற தெய்வங்கள் காணப்பட்டன. இத்தெய்வங்கள் உலகிலுள்ள மனிதர்களின் எண்ணிக்கை அளவு இருந்தன என்று வில் டியூரண்ட் (Will Durant) என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார் (மா. செண்பகம், ப. 154). காலத்தால் பிந்தி எழுந்தவை என்று பலராலும் கருதப்படும் பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப்படையிலும்தான் கடவுள் பிறப்பு, வளர்ப்பு, வெற்றி, காதல் தெய்வத்திற்குரிய சிறப்புப் பண்புகள் பற்றிய முழு தொன்மக்கதை நிகழ்ச்சிகள், சடங்குகளுடன் தொடர்புபட்டு நிற்கும் தன்மை மரபுகள் முதலியன பேசப்பட்டுள்ளன.

இத்தன்மைகள் சங்க காலத்தில் முருகன், திருமால் பற்றிய தொன்மக் கதைகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்ததைச் சுட்டுகின்றன. மேலும் முருகன் வழிபாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் சமுதாய நிகழ்ச்சிகளாகவே முன்னோர் வழிபாட்டு மரபுகளாகவே ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. ஆதலால் கலியும், பரியும், திருமுருகாற்றுப்படையும், சமயத்தை வற்புறுத்தின என்பதைவிட முருகன், திருமால் பற்றிய தெய்வங்களுக்குக் குடும்ப உறவுகள் கற்பிக்கப்பட்டுள்ளன. அத்தெய்வங்களின் பிறப்பு, வளர்ப்புக் குறித்துத் தொன்மக் கதைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. இத்தன்மைகள் பின்னுள்ள பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளன என உறுதிப்படுத்தலாம். தொன்மக் கதைகள் கிரேக்கத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பது போல் பரிபாடல், முருகாற்றுப்படையில் முருகன் பற்றிய தொன்மக்கதைகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. மேலும் பரிபாடல் முருகாற்றுப்படை பற்றிய சமயக்

குறிப்புகளை நோக்கும்பொழுது இருண்ட காலத்தை ஒட்டி எழுந்திருக்கலாமா? என்ற கருத்தும் உடன் எழுகிறது.

ஆனால் காப்பியத்திற்குரிய இயற்கை இறந்த நிகழ்ச்சி, கடவுள் மனிதர் நேரடித் தொடர்பு சங்க இலக்கியங்களில் இல்லை. ஏனெனில், காப்பியம் அங்கு முதன்முதல் எழுந்ததால், அப்பாடல் காப்பியக் கூறாகவே பேராட்சி புரிகிறது.

சங்க இலக்கியம் மானுட உணர்வுகளுக்கும், தமிழ்ப் பண்பாட்டு மரபுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. கிரேக்க இலக்கியமும் மனிதனை விட்டுவிட்டுச் சிந்திக்கவில்லை. கிரேக்கர்களின் முக்கிய ஆர்வமெல்லாம் மனிதனைப் பற்றியதாகையால் அவர்கள் மனிதத் தத்துவத்தைப் பற்றி முதன்முதல் கண்டவர்கள் ஆவார் என்பார் சி.எம். பௌரா (C.M. Bowra, Ancient Greek Literature, p. 161).

சங்க இலக்கியமும் மனிதத்தத்துவத்தை விட்டுப் பாடவில்லை. மனித உணர்வுகளை அப்படியே பாடுபொருளாகக் கொண்ட இலக்கியம் சங்க இலக்கியம். காதல், போர், வீரம், புகழ், கொடை, ஆட்சி, நிலையாமை, பிரிவு, நட்பு என்றனைத்தும் மனிதத் தத்துவத்தையே கண்முன் நிறுத்துகின்றன. மனிதத் தத்துவத்தை மனிதர்களிடம் கண்டு பாடியவர்கள் சங்கப்புலவர்கள். மனித உணர்வுகளைக் கடவுளர்களிடமும், கடவுளனைய மனிதர்களிடமும் கண்டு பாடியவர்கள் கிரேக்கப் புலவர்கள். இதே போன்று செவ்வியல் மரபுப் பின்னணியில் சமணம், பௌத்தம் இவற்றை முறையே முன்னிறுத்தும் சிலம்பையும் மணிமேகலையையும் சிந்திக்க வேண்டும்.

GRAMMATICAL TREATISES IN SANSKRIT EDITED BY FOREIGN SCHOLARS

SINIRUDDHA DASH

In linguistic study, the first and foremost question that arises is the query regarding the status of grammar or grammars in that language. That one and the same language has many grammars written for its elaboration gives its diversity of interpretation. Nowhere is this more obvious than in Sanskrit where many grammars have been written for this language. Though Pānini has been said to have written 'a monument of human intelligence' the Aṣṭhādhyāyi, even his sutras are open to interpretation. Thus we see that even one grammatical tradition has various interpretations and judgements. In Sanskrit, the Pāṇinian school has dominated intellectual and literary activity during the course of many centuries right down to the 18th century where we see Nāgeśa writing commentaries on the Mahābhāṣya.

What is the purpose of a grammatical treatise or text? In essence, it reflects the purpose of grammar itself and the reasons necessary for the study of grammar. The Mahābhāṣya, a text written or compiled by Patañjali in 1.5 B.C. E gives in its introductory book the Paspaśāhnikam, the very nature of grammar. In prose and quoting verses from ancient sources such as Vyāḍi, Patañjali tells us that the purpose of grammar is to become '*lopa-āgama-varṇavikāra-jñah*', a person well versed in the knowledge of elision, addition, changes of letters among other things. In fact he goes on to say '*eka śabdaḥ samyak jñātaḥ suprayuktaḥ svarge loke ca kāmadhuk*' implying that a word well used and well understood is capable of giving all desires.

This text read in the introductory classes of Sanskrit grammar offers deep insight into the nature of grammar. Every statement of the Vārttikakāra, Vararuci or Kātyāyana, is examined, commented on and analyzed by Patañjali. Indeed grammar itself is defined as *lakṣyalakṣaṇē vyākaraṇam*, a happy combination of usage or instances and rules thereof. Even the use of the lyuṭ affix used to form the word vyākaraṇam is discussed elaborately. But one of the central teachings of the Paspaśāhnikam is the eternality of word and meaning and the nature of word-universal or ākṛti. This backbone of the Paspaśāhnikam teaching, has been taken up by later day grammarians, such as Bhartṛhari among others who have discussed the nature of universals.

This continuity of discussion of grammatical concepts is common to Sanskrit. The line of commentarial tradition starting from Pāṇini is long and sometimes the same concept is revisited every century by a new commentator or writer. This talk will concentrate in the main, on the Pāṇinian school and its commentaries. The Aṣṭhādhyāyī forms the main text, the substratum from which all the commentaries are based. The text consists of 8 adhyāyas or chapters of 4 pādas or quarter chapters each and hence its name. The text also contains of accessory manuals such as the Gaṇapāṭha, Dhātupāṭha, Liṅgānuśāsanam, Pāñinīya Śīkṣā and the Uṇādisūtra. While the authorship of these manuals is hotly debated still, the existence of various commentaries on these point to their authenticity. The Aṣṭhādhyāyī is structured in such a way as to promote lāghava or brevity that is so essential to grammatical study. Indeed it has been said that a grammarian will rejoice in cutting down a syllable as he would over the birth of a son. Thus, the aphoristic nature of Aṣṭhādhyāyī, one of the major and unique features of the text is the assumption of the pratyāhāra, the unit of grammatical change. The áiva sutras or the pratyāhāra sutras form the basis of all sound change

described by Pāṇini. The authorship of these sutras is still controversial. The order of the adhyāyas also follows a logical succession due to the method of anuvṛtti where words of a previous sutra are read along with the sutra. This anuvṛtti is said to give rise to ordering or numbering and sets up a hierarchy of rules in grammatical operation. Thus a posterior rule has more force, a 'para' rule as compared to an anterior rule. Therefore even the arrangement of topics within the text follows the logical order. Thus, kāraka relations are finished before the second adhyāya, followed by moods and tenses in the second adhyāya followed by the formation of root stem in the third adhyāya. A major portion of the fifth adhyāya is devoted to secondary affixes. The sandhi rules are placed in the eighth adhyāya and the concept of asiddha is responsible for the relation of sandhi rules to the anterior part of the text. Thus the consistency of the text is seen with regularity of topics introduced and devices that determine the strength and force of a sutra in grammatical operation. The accessory manuals of this work such as the Dhātupāṭha, Gaṇapātha, Liṅgānuśāsanam, Pāṇinīya Śīkśā are found with many commentaries of which the commentary of Kṣīrasvāmin on the Dhātupāṭha is famous. Subsequently these manuals were assimilated into the texts of other grammatical schools as well.

Editions of Aṣṭhādhyāyī

The various editions of this seminal work sometimes seem to vary in the number of sutras cited. Some editions like Ram Nath Sarma closely follow the text of Kāśikā. The text itself in all editions consists uniformly of eight adhyāyas of four pādas each, the text starting with the sutra vṛddhiraadaic (1.1.1.) and ending with a a iti.(8.4.68). The term Aṣṭhādhyāyī extends to all subsidiary books of the text such as Gaṇapāṭha and Dhātupāṭha and the Śiva sutras.

The authorship of these subsidiary works is still hotly debated in scholarly circles although the consensus is that these instructory texts were probably handed down to Pāṇini. Some of the editions of the main sutra-pāṭha are:

1) Panini Grammatik by Otto Bohtlingk, Bonn.1839.
2) Pāṇini, his place in Sanskrit Literature, Theodor Goldstucker,reprint Allahabad, 1861.
3) Pāṇini and the Veda, Paul Thieme, Allahabad, 1935.
4) La grammaire de Pāṇini traduite du Sanskrit avec des extraits des commentaries indigenes, Paris, 1948-54. ed. by S. M. Katre,1987.
5) Aṣṭhādhyāyī of Pāṇinī,Tr. And Explanatory notes by S. D. Joshi and J. A. F. Roodbergen, Sahitya Academy, New Delhi.(12 volumes)

Gaṇapāṭha and Dhātupāṭha

The Dhātupāṭha is preserved in some commentaries such as Maitreya-rakshita. The version given in the commentaries probably did not exist to Kātyāyana. It is also known from some of Nāgēśa's statements that interpolations were common to the text. The authorship of the work has also been attributed to the etymological school (Pawte) but refuted by scholars such as Palsule. As far as the Gaṇapāṭha is concerned, even scholars such as Bhandarkar have indicated the possibility of tampering and interpolation. The work of Ayaschit and Cardona seems to bear this out.

1) Ksīrataraṅgiṇī, a comm. on Dhātupāṭha by Liebich Bruno. Marcus.

Uṇādisūtra-s

1) Ujjvala's commentary on the Uṇādisūtras, edited from a manuscript of East India House,1859 by Theodor Aufrecht.

Mahābhāsya

The first available commentary on the Aṣṭhādhyāyī is the Mahābhāṣya of Patañjali. It is in the form of a dialectic giving the prima facie view as the pūrvapakṣa, and the views of the uttarapakṣa and Siddhāntin. The resolution of the arguement is often left open ended and open to different interpretations. So difficult is this text to read and understand that the proverb mahābhāṣyam vā pāṭhayet mahārājyaṁ vā pālayet indicates the benefit of deep and arduous study of this text. Prior to the compilation of the Mahābhāṣya, Kātyāyana's Ślokavaarttika is available to us. These axioms or vārttikas were meant to complement the sutras of Pāṇini. While they were emendatory in nature in some places, their primary function was in being complementary to the sutra tradition. Often Kātyāyana or Vararuci is said to be in opposition to Pāṇini but the truth is that even in being emendatory in some places he remained faithful to the tradition. This is a first example of dissent but within the confines of the tradition and the eventual assimilation into the traditional mainstream. Patañjali's work was in examining the 1500 sutras available to him and reviewing the purpose of the vārttikas. Often he is seen as a defender of the sūtrakāra but the reality is that even he is independent in some of his views. This marked independence in thought and scholarship is the hallmark of the grammatical tradition. In order to resolve the tensions between the sūtrakāra and the vārttikakāra, Patañjali introduces novel methods to read a sūtra, such as the 'yogavibhāga' or splitting up the sūtra differently to arrive at the intended meaning. This is seen in the section on kāraka, the Kārakaahnikam, where the sutra regarding apādana or ablation is read by yogavibhāga. Thus from the beginning of the commentatorial traditon novel methods are used to explain discrepancies. Yogavibhāga itself is not new to grammarians but its employment to explain the bulwark of rules is. In a marked trend this

tendency to use a concept such as yogavibhāga is seen later in the Kārakā, an independent commentary on the Aṣṭhādhyāyī. The Mahābhāṣya is divided into 85 topics or ¡hnikas as it is said that one āhnika could be read within a day. As has already been said the first āhnika the Paspaśāhnikam deals with the fundamental concerns regarding grammar. Not only is the purpose of studying grammar delved into, the purpose of the upadēśa of letters or akṣara is also dealt with. The independence of the commentators is seen in many instances. To cite an instance, the opening sutra of the Paspaśā is 'atha śabdānuśāsanam'. There is much controversy of opinion as to whether this line is a sūtra, a vārrttika or part of the Bhāṣya. Though Kaiyaṭa is a typical Pāṇ!niya, in this instance he does not feel that this line is part of the sutra. Sticking to his position he says that the first sutra is 'vṛddhiraadaic' (1.1.1) and the line belongs to the Bhāṣya tradition. Such differences are common to the commentaries and treatises but by large the later day commentators fall in line with Pāñini, Vararuci and Patañjali. It is not without reason that Pāṇini, Vararuci and Patañjali are regarded as the Munitraya of grammar, so much so that in the 17th century Bhattoji pays respects to them before starting his prakriyā work the Siddhānta Kaumudī.

Editions of Mahābhāṣya

The standard edition is by Kielhorn followed by K. V. Abhyankar's edition. The dīpikī is the earliest commentary by Bhartṛhari on the Mahābhāṣya. The two running commentaries preserved to date on the text are the earlier Pradīpa by Kaiyaṭa and the Uddyota of Nạgeśa. The latter offers his own interpretation at times though he follows the Pradīpa in the main. M. S. Narasimhacarya worked on the commentaries Laghuvivara,a, Bṛhadvivara,a of Rāmacandra Sarasvatī, Ratnaprakaśa of Sivarāmendra

Sarasvatī Yogendra and the Nārāyaṇīya, of Nārāyaṇa Sāstrin, on the Pradīpa, a work that Filliozat came to be associated with. On the basis of the statement *ārṣe viplavate granthe* considerable controversy has been generated whether a portion of the text was lost or not. The opinion of Kielhorn seems to be that the text was not reconstructed during its transmission in manuscripts, an opinion expressed by Weber among others.

1) ed. Kielhorn. Govt. Central Press. Bombay. 1880-85.
2) ed. James R. Ballantyne. Orphan School Press. Mirzapore. 1856.
3) ed. George Buhler,Mss. Of the Mahābhāṣya from Kaśmir, IA,1878.
3) Avyayībhāvatatpuruṣāhnika ed.S. D. Joshi and J.A.F.Rood bergen, Univ. of Poona, Poona.1969.
4) Karmadhārayāhnīka ed. S. D. Joshi and J.A.F. Roodbergen, Univ. of Poona, Poona. 1971.
5) Tatpuruṣāhnika ed. S. D. Joshi and J. A. F. Roodbergen, Univ. of Poona, Poona. 1973.
6) ed. Filliozat, Institut Francaise d' Indologie, Pondicherry. 1973.
7) Kārakāhnika ed. S. D. Joshi and J. A. F.Roodbergen, Univ. of Poona, Poona. 1974.

The commentatorial tradition of the Mahābhāṣya is unbroken upto the 18th century. One of the most important commentaries on the text is the Mahābhāṣyadīpikā of Bhartṛhari. The Dīpikā though incomplete offers insight into problematic discrepancies. The date of this text is assigned to the 7th century A. D. Immediately following this composition is the production of Kaiyaśa's Pradīpa on the Mahābhāṣya. Kaiyaśa marks the end of one stage of the Pāṇiniya school. The next available commentary is the Uddyota of Nāgeśa

as late as the 18th century A. D. By this time the prakriyā grammars had gained much importance and only a few commentaries were written on the Mahābhāśya.

Kāśikā

The next major text, an independent running commentary is the Kāśikį of Jayāditya and Vāmana. While the Kāśikā is based on the Aṣṭhādhyāyī and borrows from the Mahābhāṣya it is most heavily influenced by Candra Vyākaraṇa of Candragomin. We are indebted to this text for the identification of some of the sutras as belonging to pre-Pāṇinian grammarians such as Apiśāli among others. The lack of a maṅgalācaraṇa at the beginning of the text suggests Buddhist leanings in the author. Jayāditya composed the first five chapters and Vāmana the last three. The merit of the work is that it is a running vṛtti and maintains the order of sutras in the Aṣṭhādhyāyī thus accounting for anuvṛtti among other devices that the A uses. This is where it differs from the Siddhānta Kaumudī which is a prakriyā work that disturbs the order of the A and therefore also of the hierarchical structure of the rules. The Kāśikā also follows the yathoddeśapakṣa giving a full knowledge of the words and not merely its forms or derivations as the prakriyā grammar does. But the Kāśikā also differs from the A in about 58 rules some of which have come about by splitting the original i.e. by yogavibhāga. The main commentary on the Kāśikā is the Nyāsa of Jinendrabuddhi who is quoted by no less a rhetorician than Bhāmaha. Following the Nyāsa (5th century A. D.) Haradatta composed in the 8th century the Padamañjarī on the Kāśikā. Thus the Kāśikā enjoys the presence of two major commentaries on the text.

Editions of Kāśikā

1) La Kāśikāvṛtti adhyāya I pādal 2 vols. École française d' Extrême Orient. Paris. 1960-62.

2) La Kāśikāvṛtti adhyāya I pādal traduite et commentee par Yutaka Ojihara et Louis Renou, Paris, 1967.

3) At present Johannes Bronckhurst of Switzerland is working with Saroja Bhate of Pune on a edition of running Kāśikā.

The Prakriyā grammars

The period between Kaiyaṭa and the beginning of the prakriyā tradition is characterized by recasts of the Aṣṭhādhyāyī of which the Ruupamāla is one such.

Rāmacandra was the first to write a prakriyā grammar, the Prakriyā kaumudī, in the beginning of the 15th century. The most famous commentary on this text is the Prasāda of Viṭṭhalācārya. The other commentary is the Prakriyāprakāśa of Śeṣa NarasimhaSūrī.

1) Gustav Oppert, The grammar of śākatāyana with the prakriyasaṃgraha commentary of AbhayacandraSūrī, Madras, 1894.

Bhaṭṭōji Dīkṣita's Siddhānta Kaumudī

The work, Siddhānta Kaumudī is the magnum opus of Bhaṭṭōji Dīkṣita written in 1650 A. D. This is in the prakriyā or perfected tradition where the original sutras of Pāṇini have been rearranged for the ease of instruction. The Siddhānta Kaumudī follows the kāryakālapakṣa giving merely the forms and derivations of words. Thus after the introduction to Saṃjña or technical terms it deals with sandhi rules, a section that finds place in the last part of the Aṣṭhādhyāyī. The grouping together of similar topics under the same heading has made this work so popular that with the passage of time it ousted out the Aṣṭhādhyāyī in terms of popularity. So much so, that it was read only by serious scholars but the Kaumudī found acceptance among all as

a ready reference manual. However as previously stated the drawback of the Kaumudī is that the devices such as anuvṛtti, maṇḍūkapluti are hard to decipher in the ordering of sutras. The force of the 'para' rule is hard to understand as the numbering has changed. To remedy this Bhaṭṭōji provided a vṛtti to make it self explanatory and this vṛtti has become extremely popular.

Bhaṭṭōji wrote a commentary the Prauḍha manoramā that is different from the commentary Bālamanoramā. The immediate commentary on this latter manoramā is the Tattvabodhinī of Jñānēndra Sarasvatī. Moreover, the commentary Śabdakaustubha is a commentary on the Asṭhadhyayi by Bhaṭṭōji. This work is incomplete.

Editions

LaghuSiddhānta Kaumudī

1) ed. James Ballantyne 1889.

The next most illustrious Pāṇiniya is Nāgeśa a pupil of a close relative of Bhaṭṭōji. His commentary the Uddyota is on the Pradīpa of Kaiyaṭa. Apart from this he compiled the Paribhāṣenduśekhara a collection of paribhāṣas or rules of interpretation. He is also responsible for Śabdaratna, a commentary on the Prauḍhamanoramā and different editions of Śabdenduśekhara on Pāṇini's grammar. Among the other works is viṣamī a commentary on Śabdakaustubha. His final and lasting contribution to grammar are the three editions of the Vaiyākaraṇasiddhānatamañjūṣā.

Editions

Paramalaghumañjūṣā

1) currently Prof. George Cardona is working on Paramalaghumñjuṣā edition.

Paribhāṣēnduśēkhara

1) ed. F. Kielhorn, Part I, Indu Prakash Press, Bombay, 1868, Part II, 1874.

Vaidaynātha Payaguṇde has written many commentaries on the existing works. Gadā on Paribhāṣēnduśēkhara, Kalā on the Mañjūṣā, Prabhā on Śabdakaustubha, Bhāvaprakāśikaa on Śabdaratna are among others.

AnnamBhaṭṭa outside the circle of the Dīkṣita school wrote the Mitākṣarī an independent commentary on the Aṣṭhādhyāyī. This writer is the same as the author of the Nyāya manual Tarkasaṅgraha. Varadarāja contributed to the abridgement of the Siddhānta Kaumudī into Madhya, Laghu and Sāra versions. The progressive simplification of the texts ultimately resulted in manuals such as Rūpāvalī and Samāsacakra.

Vākyapadīya and Texts on the Philosophy of grammar

Around 650 A. D. Bhartṛhari wrote the famous tract the Vākyapadīya on the philosophy of grammar expounding Sabdādvaita or monism of language. The book is divided into three parts, the Āgama, the Vākya and the Pada Kāṇḍas. The first Kāṇḍa has the illustrious commentary of Vṛṣabhadeva the Paddhati and the more recent Ambākartrī by Raghunatha Sarma. Punyarāja and Helarāja are the two main commentators of the other two Kāṇḍas. Bhartṛhari himself has written an autocommentary, the vṛtti on the Āgama or Brahma Kāṇḍa. This text is important in that it carries on the tradition laid by previous grammarians such as Patañjali on the topics such as universals and the relation between word and meaning which is eternal according to the grammarians. Bhartṛhari's original contribution lies in synthesis of the theory of Sphoṭa, resonance of which was

found earlier. Kāla or Time, Jāti or universals and vṛtti or complex derivations are analyzed threadbare in an attempt to go deeper into the semantics of form or structure of the word.

1) Brahmakāṇḍam avec la vṛtti de Harivṛṣabha, ed. Madeiline Biardeau, Boccard, Paris, 1964.

2) The philososphy of Trikāṇḍī, Ashok Aklujkar, Harvard University dissertation on Bhartṛhari the grammarian with extensive bibliography.

Other works on Semantics

Kauṇḍa Bhaṭṭa's Bhūṣaṇasāra after the time of Bhaṭṭoji is an abridgement of his larger Siddhānta Bhūṣaṇa. The work is exceedingly semantic in outlook and he devotes a chapter to the delineation of Sphoṭa theory.

Bhūṣaṇasāra

This text by Kauṇḍa Bhaṭṭa is mostly semantic and has the following edition though Chowkhamba has more than three editions.

1) M.M. Deshpande, Kauṇḍabhaṭṭa on the philosophy of nominal meanings (the text of Kauṇḍabhaṭṭa Nāmārthanirṃaya with an English translation explanation and introductory essay, University of Pennsylvania dissertation,1972.

Sphōṭasiddhi

This text by Maṇḍana Miśra vindicates the theory of Sphoṭa against Mīmāmsakas.

1) Madeleine Biardeau, Institut Francaise d' Indologie, Pondichery, 1958.

The Non-Pāṇiniya Grammars

Aindra School of Grammar

1)Burnell A.C. On the Aindra school of Sanskrit grammarians their place in Sanskrit literature and subordinate literatures, Mangalore,1875.

Cāndra Vyākaraṇa

Candragomin lived before the time of the Kāśikā and thus the lower limit of his date is considered to be 650A.D. The upper limit is given by a reference to the Huns and thus the date of Candragomin is fixed at 470 A.D. according to Belvalkar. Candragomin was a Buddhist and accordingly made changes in his grammar expunging vedic examples and references. The number of pratyāhāras is also lesser in his scheme .The total number of sutras amounts to 3100 as against the 4000 odd of Pāṇini. The work is of six chapters of four pādas each. Candragomin has grouped together the sutras of a grammatical operation but his terminology is as artificial as Pāṇini. The accessory works of this grammar are the Varṇa śīkṣā akin to the Pāṇiniya one, the Liṅgānuśāsanam, an Uṇādisūtra list, Upasargavṛtti and the Gaṇapāṭha. The Dhātupāṭha of Pāṇini commented by Kṣīrasvāmin has been modified to meet the needs of the Buddhists. Being the work of Buddhists it shared the same fate and quickly went out of vogue due to its lack of originality. Many Ceylonese and Tibetan translations preserve this grammar.

1) Bruno Liebich, C¡ndravy¡kara¸a: die Grammatik des Candragomin, Sūtra, uṇādi, Dhātupāṭha, Liepzig, Brockhaus, 1902.

Jainendra school

Devanandi is the author of this grammar and his date precedes Candragomin. This grammar consist of about

3000 sutras in the shorter version followed by Abhayanandī and about 3700 sutras in the version followed by Somadeva. There is an utter lack of originality and the work suffers from clarity although brevity is maximized. The pratyāhāra sutras and the vedic accents are omitted. One recast of this work is available in the 15th century A.D. but it died a natural death.

Another Jain grammar is the Śakaṭāyana school which consists of the work Sabdānuś- āsana with a total number of sutra being 3200. He has omitted vedic references and included 13 pratyāhāra sutras. The accessory works are found attached to this work. This work along with its commentaries came to naught with the compilation of Hemacandra's Śabdānuśāsana. This work consists of 4500 sutras in 8chapters of 4 quarter chapters each. The striking feature of this work is the fact that the last chapter consists of rules of the Prākṛt language only. Hemacandra also wrote a commentary on his own work the Bṛhadvṛtti. The text lacks originality borrowing alternately from Pāṇini Candragomin and Devanandi. The accessory manuals such as Dhātupāṭha Gaṇapāṭha, Liṅgānuśāsanam and a book of Paribhāṣas are found attached to the text. The fifteenth century saw a culmination of commentaries on this grammar but Hemacandra's work fell into disuse.

Other Grammars

The most popular and simplified grammar was that of Śarvavarman who wrote the Kātantra grammar. Burnell pointed the relation between Kātantra and the Tamil grammars as the former also is said to be from the Aindra. The work consists of 1400 sutras and the vedic accents were omitted. The status of the kṛt and taddhita sections are controversial as they are regarded to be interpolations by some. Durgasimha wrote a commentary to this work.

Another grammar is the Sārasvata school which consists in its work of only 700 sutras. This grammar

dispenses with the anubandhas and by simplifying extensively gains in economy. The arrangement of these sutras by Anubhutisvarūpācārya resulted in the Sārasvata prakriyā. The Sārasvata prakriyā enjoyed the attention of many commentators and also consists of the various accessory manuals.

The Mugdhabodha of Bopadeva belongs to the 13th century. Belvalkar admires the clarity, the economy and the originality of Bopadeva. The only accessory treatise found is the Kavikalpadruma the list of roots and Kāmadhenu with quotations.

The two other prominent schools are the Jaumara school of Kramadiiśvara and the Saupadma school of Padmanabhadatta.

An interesting aspect of these schools is that they have survived to date in Bengal, far away from Maharashtra, which saw a resurgence of the Pāṇinian Prakriya tradition. The other works that followed the former works show a great degree of sectarianism in that the employment of technical terms is reflected in the use of the names of Hari, Kṛṣṇa or Rādha as the case maybe.

The examination of grammatical treatises reveals the predominant position that Pāṇini enjoyed and even with the short lived popularity of Candra's grammar the functionality of a complete, perfect and original grammar could not be superseded. However the tradition illustrates the fact that grammars reflect the need of the day and are written with the implicit understanding that they will meet that need. The position of the commentaries is so highly esteemed in Sanskrit that it is said that vyākhyānato viśēṣapratipattiḥ na hi sandehāt alakṣanam. Thus a commentary with its special emphasis can throw light on a problem and our doubts cannot repudiate their importance or significance. This

importance given to the commentarial tradition underlies all significant grammatical activity in Sanskrit.

Miscellaneous but significant works on grammar by other foreign scholars:

Al-George, Sergiu, contributed many articles to subject in Pāṇini and zero in Pāṇini

Allen, William Sidney, was responsible for the exposition of Phonetics in Ancient India, Oxford University Press, London,reprint, 1963.

Theodor Aufrecht, De accentu compositorum sanskritorum, Bonn, Konig, 1847.

Bendall Cecil, Review of Kielhorn, A grammar of the Sanskrit Language, Bombay, Government Central Book Depot, 1889.

Benfey Theodor on Vedic grammatical works,1852,1874.

Leonard Bloomfield works such as review of Liebich(1929) and in Language,1933 NY,USA.

John Brough, works on early brahminical gotra and pravara systems,1953, Cambridge.

Thomas Burrow, The Sanskrit Language, London, Reprint, 1959.

Paul Kiparsky, Pāṇini as a Variationist on the rules of vibhāṣā

J.S.Speijer, Sanskrit Syntax, Reprint, Kyoto, 1886.

J.F.Staal, Among his many works on Vedic and grammar Euclid and Pāṇini deserves special mention for a comparative study. Also his book on Universals touches on all branches of Sanskrit on the nature of Universals. Besides, he has written READER ON THE

SANSKRIT GRAMMARIANS, Cambridge, MIT press, 1972.

Jakob Wackernagel, Altindische Grammatik, ersterr Band, Lautlehre, Reprint with introduction by Louis Renou, 1957.

Albrecht Weber, The history of Indian Literature tr. From the second german edition by John Mann ND Theodor Zachariae reprint, Varanasi, 1877.

Whitney, Sanskrit grammar, Harvard Univ. press, 1955 reprint.

References

1) George Cardona, *Pāṇini - A Survey of Research,* Motilal Banrsidass, Delhi,1976.

2) George Cardona, *Recent Research in Pāṇian Studies,* Motilal Banarsidass, Delhi, 1999.

3) S. K. Belvalkar, *Systems of Sanskrit Grammar,* Aryabhushan Press, Poona, 1915.

4) K. V. Abhyankar and J. M. Shukla, *Vyākaraṇa Mahābhāṣyam (Navāhnikī)*, Poona, 1968.

Acknowledgement

I would like to acknowledge the assistance received from Dr. G. Gayathri Preetha in the preparation of this document.

செம்மொழித் தமிழ் மொழியியல் ஆய்வுகள்

செ.வை. சண்முகம்

1. செம்மொழித் தமிழ்

செம்மொழித் தமிழ் என்பது அண்மையில் இந்திய அரசு தமிழுக்குக் கொடுத்த ஒரு புதிய அடையாளம். தமிழின் வரலாற்றுத் தொன்மையையும், உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியத்தின் தனித் தன்மையையும் கருதி, கி.பி. 2004 செப்டம்பர் 17ஆம் நாள் இந்திய மொழிகளில் தமிழ் ஒரு செம்மொழி என்று இந்திய அரசு ஓர் அரசாணையை வெளியிட்டது. அதன் தொடர்பாகத் தமிழ் அறிஞர்கள் குழு, கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை உள்ள 41 தமிழ் நூல்களைச் செம்மொழித் தமிழ் இலக்கிய இலக்கணங் களாகக் கருத வேண்டும் என்று முடிவு செய்தது. அவையாவன: தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், (இறையனார்) களவியல் ஆகியவை.

2. அடையாள வரலாறு

இளம்பூரணர் (11ஆம் நூற்றாண்டு) 'சான்றோர் செய்யுட் கோவை' என்றும் (அகத்திணையியல் 5), 'பெரியபாட்டு பத்துப்பாட்டு' என்றும் (செய்யுள். 150) குறிப்பிடுவதில் சான்றோர் செய்யுட்கோவை என்பது எட்டுத்தொகையைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. பத்துப்பாட்டுப் பெயர்களை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரத்தை ஓரிடத்தில் நேரடியாகவும் (செய்யுள். 150), இன்னொரு இடத்தில் (அகத்திணை. 20) காடுகாண் காதை அடிகளை (64-66) எடுத்துக் காட்டி, 'பிற சான்றோர் செய்யுளகத்து வருதல்' - என்று குறிப்பிடுவதால் சிலப்பதிகாரத்தைப் பிற சான்றோர் செய்யுள் என்ற வகையில் அடக்கியுள்ளார் என்பது தெளிவு.

பேராசிரியர் (13ஆம் நூற்றாண்டு) பாட்டும் தொகையும் (செய்யுளியல் 52) என்று குறிப்பிடுவது பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும். தற்கால வரலாற்று ஆசிரியர்கள் சங்க நூல்கள், சங்கம் மருவிய நூல்கள் என்று குறிப்பிடுவார்கள். இது பழங்காலத்தில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கப்பட்டது என்ற மரபு வழக்கத்தின் அடிப்படையாகும்.

சங்க இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இராமானுஜம் (Poems of War and Love, Oxford, 1985) முன்னுரையில், 'தமிழ் இரண்டு இந்தியச் செம்மொழிகளில் ஒன்று' என்றும், 'சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள்' என்றும் குறிப்பிட, சங்க இலக்கிய மொழிக்கு நோக்கீட்டு இலக்கணம் எழுதிய இராஜம் (A Reference Grammar of Classical Poetry, Philadelphia: The American Philosophical Society, 1992) அதற்குச் செவ்வியல் இலக்கியம் என்ற தலைப்பே கொடுத்துள்ளார். அகத்தியலிங்கம் (1997) 'சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே' என்ற நூல் எழுதியுள்ளார். இவையெல்லாம் அரசு தமிழைச் செம்மொழி என்று அறிவிப்பதற்கு முன்னரே சங்க இலக்கியத்தின் சிறப்புத் தன்மையை மனதிற்கொண்டு கூறப்பட்டவை களாகும். உலகளாவிய வரலாற்று மொழியியல்படி இவை பழந்தமிழ் (Old Tamil) நூல்கள் என்று அழைக்கப்படும். ஆனாலும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கில் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. செம்மொழித் தமிழ் இன்னும் பரந்த தளத்தை உள்ளடக்கியது.

செம்மொழித் தமிழ் நூல் பற்றி மூன்று முக்கியச் செய்திகள் சுட்டிக்காட்டத் தகுந்தவை.

1. அவற்றில் இரண்டு இலக்கண நூல்களும், 39 இலக்கிய நூல்களும் அடங்கியுள்ளமை. (இலக்கண இலக்கியம் என்ற வேறுபாடு மொழியியல் ஆய்வுமுறையிலும் வேறுபடுவது பற்றிப் பிற்பகுதியில் சுட்டிக் காட்டப்படும்).

2. அவைகளின் காலத்தைக் கி.மு. 300 - கி.பி. 600 என்று குறிப்பிடுவதால் வரலாற்று மொழியியல் நோக்கில் இது தமிழ்மொழியின் ஒரு காலக்கட்டத்தை (Period), குறிப்பாகப் பழந்தமிழ்க் காலக்கட்டத்தைக் குறிப்பதாகக் கொள்ளப் பெறுவது.

3. ஒரு காலக்கட்டம் என்னும் பொழுது அந்தக் காலக் கட்டத்துக்குள் ஏற்படும் வேறுபாட்டையும் வளர்ச்சியையும் ஒட்டி நூல்களைக் கால வரிசைப்படுத்துவது (Relative Chronology of the works).

வரலாற்று மொழியியல் நோக்கில் பார்க்கும்பொழுது செம்மொழித் தமிழ், தமிழ்மொழியின் பழங்காலக் கட்டத்தைச் சேர்ந்ததாக

இருப்பதால் அந்தக் காலக்கட்ட மொழி அமைப்பு, எப்படி அந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பிறமொழிகளோடு ஒற்றுமையும், வேற்றுமையும் உடையதாக அமைந்து தனிமொழியாக உருப்பெற்ற தொல் வரலாறுக்கும் (Pre-history) உள்ளடங்குவது. அது போலவே, பழங்கால மொழி எப்படி இடைக்கால மொழியாக வேறுபட்டது என்ற வரலாற்று ஆய்வுக்கும் (Historical Grammar) உறுதுணையாக இருப்பது.

3. மொழியியல் ஆய்வு வகைகள்

மேலே குறிப்பிட்டபடி செம்மொழித் தமிழ், இலக்கணம், இலக்கியம் என்ற இரண்டு வகைகளை உள்ளடக்கி இருந்தாலும் மொழியியல் ஆய்வுத் தரவுகள் என்ற முறையில் 41 நூல்களின் மொழி, மொழியியல் ஆய்வுக்குத் தனியே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தமிழைப் பொறுத்தவரையில் இலக்கணம் என்பது இலக்கிய ஆய்வையும், தமிழ் மரபுப்படி பொருள் ஆய்வையும் உள்ளடக்கி யுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரமும் களவியலும் இலக்கியக் கோட்பாட்டு ஆய்வுக்குரியவை. ஆகையால் அவை இங்கு மொழியியல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டும் மொழியியல் ஆய்வோடு நேரடியாகத் தொடர்புடையதால் அவை பற்றிய ஆய்வே இங்கு விளக்கப்படும்.

4. இலக்கணம் : பொது மொழியியல் ஆய்வு

எழுத்து, சொல் இலக்கணங்கள் அடிப்படையாக மொழி அமைப்பை விளக்குவதால் அது ஒரு வகையில் மொழியியல் ஆய்வு நூல் - குறிப்பாக ஒரு காலக்கட்ட மொழியின் விளக்கமுறை மொழியியல் ஆய்வு நூல் என்று கருதலாம். இருந்தாலும் மொழி அமைப்பை எளிமை யாகவும், தெளிவாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்ள மொழியியல் கோட்பாட்டு நோக்கில் மறுவருணனை ஆய்வு (Reinterpretative Study) செய்யும் முறை பரவலாகக் காணப்படுகிறது. உதாரணமாக, தொல்காப்பியர் விளக்கிய சாரியை இடைச்சொற்களின் மறுவருணனை ஆய்வே அவற்றின் சரியான வடிவத்தையும் பொருளையும் புரிந்துகொள்ள உதவுகிறது. உதாரணமாக, தொல்காப்பியர் அக்கு, இக்கு என்று கூறிய சாரியைகள் (புணரியல் 17) உண்மையில் முறையே அகரத்தையும் குகரத்தையும் மட்டுமே குறிப்பவை. புணர்ச்சி வடிவங்கள் தனித்தன்மை வாய்ந்தவையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தொல்காப்பியர் அப்படிக் குறிப்பிட்டுள்ளார் (சண்முகம் 2001, ப. 204-28).

இந்த மறுவருணனை ஆய்வு இரண்டு நிலைகளில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவது மேலே காட்டிய மொழி அமைப்புப் பற்றியது. இன்னொன்று: இலக்கண ஆசிரியரின் கோட்பாட்டைக் கண்டுபிடித்து அதனையும் மறுவருணனை செய்வது. மறுவருணனை என்பதை மாற்று வருணனையாகவும் கருதலாம்.

இரண்டாவதாக இலக்கணம் மொழி அமைப்பை விளக்கும் வருணனையிலும் விளக்கத்திலும் அமைந்துள்ள கோட்பாடுகளை இனம் காணுவதும் ஒரு வகை மொழியியல் ஆய்வே. இது இலக்கண மொழியியல் கோட்பாட்டு ஆய்வு (Linguistic Theories of Grammar) என்று அழைக்கப்படும். அதுவே பிற மொழியியலாருக்கும் மொழியியல் வரலாற்று ஆசிரியர்களுக்கும் பயன்படக்கூடியது. இதுவே உலக அளவில் ஓர் இலக்கணத்தின் பெருமையைப் பறைசாற்றப் பயன்படுவது.

இங்கும் மொழியியலாரின் அல்லது மொழியியலின் கோட்பாட்டு நோக்கில் மறுவருணனை செய்வது அவசியம். உதாரணமாக அக்-, -க்கு என்ற வடிவங்களை முறையே அக்கு, இக்கு அடிநிலைக் கிளவிகளாகக் (Base form in Sandhi) கொண்டு சில புணர்ச்சி விதிகளையும் கூறியுள்ளதற்குத் தொல்காப்பியரின் இரண்டு கோட்பாடுகளே காரணம்.

1. அடிநிலைக் கிளவிகள் மொழியியல் அமைப்புக்கு மாறுபட்டு இருக்கக்கூடாது. அதாவது தமிழில் வல்லெழுத்துகள் சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரா என்பதால் அக்கு இக்கு என்று கொண்டது.
2. அடிநிலைக் கிளவிகள் ஒவ்வொன்றும் தனித்தனி வடிவம் (Unique form) கொண்டதாக இருக்க வேண்டும் என்பது.

சொல்லதிகாரத்தில் 'இடைச்சொல்' என்று கூறிய சொல்வகையில்

(அ) ஒட்டுகள் (Bound Morphemes)

(ஆ) ஒட்டிகள் (Clitics)

(இ) அகராதியன்கள் (எல், தஞ்சம் போன்றவை)

என்று மூன்று வகை அடங்கியிருப்பது இன்று உணரப்பட்டுள்ளது (சண்முகம், 1992: 261-84). எனவே இலக்கண ஆசிரியரின் மொழியியல் கோட்பாடு என்ன? இன்றைய மொழியியல் நோக்கில் ஆசிரியரின் மொழியியல் கோட்பாடு என்ன? என்று காண்பது, கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்வது என்று கோட்பாட்டு ஆய்வும் இரண்டு வகைப்படும்.

அண்மைக்காலமாக இலக்கணத் தோற்றத்திற்கான காரணம், இலக்கணத்துக்கும் இலக்கியத்துக்கும் உள்ள உறவு, இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவு ஆகியவற்றை ஆராயும் இலக்கண சமூக இயல் என்ற (Sociology of Grammar) ஆய்வு, உலக அளவிலும் தமிழக அளவிலும் பேசப்பட்டு வருவது சமூக மொழியியலின் (Sociolinguistics) ஒரு பகுதியாகக் கருதத்தகுந்தது.

5. செம்மொழித் தமிழ் இலக்கண மொழியியல் ஆய்வு

செம்மொழித் தமிழில் அடங்கியுள்ள இரண்டு இலக்கணங்களில் மிகப் பழமையானது தொல்காப்பியமே. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் விளக்கும் மொழி அமைப்பும் இலக்கண இலக்கியக் கோட்பாடுகளும் சிறப்பானவை; தனித்துவம் வாய்ந்தவை. அதன் முழுச் சிறப்பு இன்னும் உலக அளவில் உணரப்படவில்லை. அதற்கு ஒரு காரணம் நாம் மொழியியல் கோட்பாட்டு நோக்கில் ஆராய்ந்து அதன் கோட்பாட்டுப் பெருமைகளை உலக அளவில் உணர்த்தாததுதான்.

தொல்காப்பியத்தின் முதல் ஆய்வாளர்களாக, தமிழ் இலக்கண ஆசிரியர்களே கருதத் தகுந்தவர்கள். உதாரணமாக 'எல்' என்ற சொல்லை ('எல்லே விளக்கம்' - இளம்பூரணர் பாடம் - இடையியல்: 21) 'உரிச்சொல் நீர்மைத் தாயினும்' ஆசிரியர் இடைச் சொல்லாக ஓதினமையால் இடைச்சொல் என்ற கோடும்' - என்ற சேனாவரையர் (13ஆம் நூற்றாண்டு) வாசகம் அந்தச் சொல் வகை பற்றிய ஐயத்தைக் குறிப்பிடுகிறது. உரையாசிரியர் என்ற முறையில் அவர் ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், நேமிநாதர் (12ஆம் நூற்றாண்டு) 'எல்லும் விளக்கம் எனல்' (உரியியல் 59.4) எனக் கூறியுள்ளதால் நூலாசிரியர் என்ற முறையில் அவர் மறுவருணனை செய்துள்ளார் என்று சொல்லலாம். ஆனால் 'எல்' என்ற சொல்லின் முழுப் பகிர்வையும் கவனிக்கும்போது, 'எல்லினன் பெரிதேல்' (குறுந்தொகை, 45.3), விளக்கமுடையவன், எல்லும் எல்லின்று பகல்பொழுது மயங்கியது (குறுந்தொகை, 179.2), இடைச்சொல்லாகவே கருதலாம் என்று இன்று உணரப்பட்டுள்ளது (சண்முகம், 1992: 235).

அடுத்த நிலையில் தொல்காப்பிய உரையாசிரியர்களே தொல்காப்பிய மொழியியல் ஆய்வாளர்களாகக் கருதத்தகுந்தவர்கள். அவர்கள் உரை பல இடங்களில் மறு வருணனை ஆய்வாகவும் மொழியியல் கோட்பாட்டு ஆய்வாகவும் அமைந்துள்ளது.

இலக்கண உலகில் உரையாசிரியர் (11-16ஆம் நூற்றாண்டு) என்ற போர்வையின்றி இலக்கண ஆராய்ச்சி செய்த பெருமை 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவஞானமுனிவருக்கே உரியது. அவருடைய **தொல்காப்பியப் பாயிர விருத்தியும் முதல் சூத்திர விருத்தியும்** இருபதாம் நூற்றாண்டு ஆய்வுமுறை வளர்ச்சியின் முன்னோடியாகக் கருதத் தகுந்தவை. அவர் தொல்காப்பியத்தை மறுவருணனை ஆய்வும் கோட்பாட்டு ஆய்வும் செய்துள்ளார். அவரே முதன்முதலில் உயிரெழுத்துகளில் குறிலும் நெடிலும் வேற்றுநிலை வழக்கில் வருவதால் (அடு/ஆடு) தனி எழுத்துகளாகக் கருதவேண்டும் என்று விளக்கி உயிரளபெடை அப்படி அமையவில்லை என்றும் சுட்டிக்காட்டி யுள்ளதால் ஒலியன் கோட்பாட்டை முன்மொழிந்தவராகக் கருதலாம்.

> **நெட்டெழுத்தாவது நீரும் நீரும் சேர்ந்தாற் போலக் குற்றெழுத்து இரண்டு ஒத்து நின்று நீண்டிசைப்பது ஒன்றாகலின், அஃது உணர்ந்து கோடற்குக் குற்றெழுத்து களுக்குப் பின்னர் நெட்டெழுத்துக்கள் வைக்கப்பட்டன. . . . இந்நெட்டெழுத்துக்கள் மொழி காரணமாய் வேறு பொருள் தந்து நிற்றலின் அது பற்றி வேறு எடுத் தெண்ணி உயிர் பன்னீரெழுத்து எனப்பட்டன.* அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்துநின்று நீண்டிசைப்பது ஒன்றாயினும், மொழி காரணமாய் வேறு பொருள் தராது இசை நிறைத்தல் மாத்திரை பயத்தலாய் நிற்றலின் வேறு எழுத்தென வைத்து எண்ணப்படாததாயிற்று என்பது நுண் உணர்வோர் ஓர்ந்து உணர்க**

என்பது அவரது வாசகம். 20ஆம் நூற்றாண்டின் ஒலியன் கோட்பாடும் அதற்கு அடிப்படையாகப் பேசப்படும் குறைந்தபட்ச இணைகள் என்ற கருத்தமைவும் இங்குப் புதைந்துள்ளதைக் காணலாம்.

20ஆம் நூற்றாண்டு எழுத்ததிகார ஆய்வைப் பொறுத்தவரை வேங்கடராஜுலு ரெட்டியார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், கா. பால சுப்பிரமணியன், க. முருகையன், செ.வை. சண்முகம், சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் மறுவருணனை ஆய்விலும் கோட்பாட்டு ஆய்விலும் குறிப்பிடத் தகுந்தவர்கள். தொல்காப்பியரின் ஒலியன் கோட்பாடு

* கருத்து முக்கியத்துவம் கருதி அடிக்கோடு இடப்பட்டுள்ளது

மாற்றிலக்கண மொழியியலாளரின் ஒலியன் கோட்பாடான விதிமுறை ஒலியன் கோட்பாட்டை ஒத்தது என்று இப்போது உணரப்பட்டுள்ளது. அவருடைய புணரியல் கோட்பாடு ஒலிக் கட்டுப்பாடு மட்டும் அல்லாமல் சொல், பொருள், இலக்கண உறவு, சொல் வகைப்பாடு ஆகிய பல நிலையிலும் கட்டுப்பாடு உடையது என்ற கருத்தும் உடையது என்று உணரப்பட்டுள்ளது.

சொல்லதிகாரத்தைப் பொறுத்தவரையில் ச. அகத்தியலிங்கம், மு. இஸ்ரேல், செ.வை. சண்முகம் ஆகியோர்களது ஆய்வு குறிப்பிடத் தகுந்தது. மூன்றாம் வேற்றுமை வினைமுதல் பொருளிலும் வரும் என்பார் தொல்காப்பியர் (வேற்றுமை. 12). அகத்தியனாரால் தமிழ் உரைக்கப்பட்டது என்பதே அதற்குரிய உதாரணம். இங்கு அகத்தியனார் தமிழை உரைத்தார் என்ற புதைநிலை வாக்கியத்திலேயே அகத்தியர் என்பது வினை முதலாகும். இங்குப் புறநிலையில் மூன்றாம் வேற்றுமையாக இருப்பதை வினை முதல் என்று கூறியதற்கு அதன் புதைநிலை அமைப்பே காரணம். இது மாற்றிலக்கண மொழியியலுக்கு முன்னோடி.

தொல்காப்பியரின் சொல்லதிகாரம் சொல்லியலை (Morphology) விடத் தொடரியலுக்கே முக்கியம் கொடுத்துள்ளதும், தொடரியலில் புறநிலை அமைப்பு (Surface Structure), புதைநிலை அமைப்பு (Deep Structure) என்ற வேறுபாட்டை உணர்ந்து ஆங்காங்கே விளக்கி யுள்ளதும், தனி வாக்கியத்தின் தொடரியல் அமைப்பு மட்டுமல்லாமல், கருத்தாடல் நோக்கில் அமையும் கிளவிகள் (utterance - அது ஒரு சொல்லாகவும், தொடராகவும், ஒரு வாக்கியமாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் அமையலாம்) என்ற முறையில் கவிதையின் தொடரமைப்பு மாற்றத்தை 'மொழிபுணர் இயல்பு' என்று விளக்கியுள்ளதும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவை. தொல்காப்பியச் சொல்லதிகாரம் இலக்கிய மொழி ஆய்வுக்கும் - மொழியியல் திறனாய்வுக்கும் முன்னோடியாக அமைந்துள்ளதும் இப்பொழுது தெளிவாகி உள்ளது.

தொல்காப்பிய இலக்கணச் சமூக ஆய்வே உலக அளவில் காணப்படும் மிகப் பழைய இலக்கணங்களோடு ஒப்பிட்டு, தொல்காப்பியத்தின் தனித்தன்மையையும் தோன்றியதற்கான காரணத்தையும் ஓரளவு விளக்கியுள்ளது (அகத்தியலிங்கம், 2001, 2005, சண்முகம், 1989). உலகில் மிகப் பழைய இலக்கணங்கள் (சுமேரிய மொழி, கி.மு. 1600, வடமொழிப் பாணினி இலக்கணம் கி.மு. 500, கிரேக்கம், டையோனியஸ் த்ராக்ஸ் (Dionysius Thrax), டெக்னே கிரமடிகே (Techne

Grammatike) கி.மு. 100) மொழி அமைப்பை (எழுத்து, சொல்) மட்டுமே விளக்கும் இலக்கணங்களாக அமையத் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் மூன்றையும் விளக்கும் இலக்கணமாக அமைந்துள்ளது. இலக்கணச் சமூக ஆய்வின் ஒரு கூறான இலக்கண உருவாக்கத்தில் பிறமொழிச் செல்வாக்கும் அடங்கும். தொல்காப்பியருக்கு வடமொழி தெரியும் என்று இன்று பரவலாக ஒத்துக்கொள்ளப்படுகிற நிலையில் அதன் செல்வாக்கு, தொல்காப்பியத்தின் தனித்துவம் ஆகியவை பற்றி ஆராய்ச்சிகள் (சுப்பிரமணிய சாஸ்திரி, 1934, மீனாட்சி, 1997) மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இறையனார் களவியல் என்று குறிப்பிடப்பட்டிருப்பது களவியல் என்ற நூலின் ஆசிரியர் இறையனார் என்ற பொது வழக்கில் வழங்கும் மரபை ஒட்டியது. நூலுக்குள் சிவபெருமான் இயற்றியதாகவே குறிப்புகள் காணப் படுகின்றன. அது ஒரு ஐதீக/வைதீக மரபே. அதனால் ஆராய்ச்சியாளர்கள் ஆசிரியர் பெயர் தெரியவில்லை என்று கருதுகிறார்கள். அது ஒரு பொருள் இலக்கணம். அதன் தோற்றத்துக்குக் காரணமான இலக்கண சமூக இயல் நோக்க ஆய்வு (சண்முகம், 1994) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. மொழியியல் : சொல் ஆய்வு

மொழியியல் என்பது கடந்த 50 ஆண்டுகளாய்க் கலைச் சொல்லாய் அறிவியல் வழிப்பட்ட மொழி ஆய்வைக் குறித்து வருகிறது. இங்கு இயல் என்பது அறிவியல் ஆய்வைக் குறிக்கும் கலைச்சொல்லாய்ப் பரவலாகப் (விலங்கியல், தாவரயியல், இயற்பியல், வேதியியல்) பயன்படுத்தப்படுகிறது. ஆனால் செம்மொழிக் காலத்தில் நூலின் உட்பிரிவைக் குறித்து ஓத்து (அ) அத்தியாயம் என்ற பொருளில் வழங்கியது என்பதற்குத் தொல்காப்பியம் பிறப்பியல், புணரியல், வேற்றுமையியல், அகத்திணையியல் போன்றவை சான்றாகும். அந்த முறையிலேயே நன்னூலார் (14ஆம் நூற்றாண்டு) பதவியல் என்று கூறியதை 18ஆம் நூற்றாண்டில் முத்துவீர உபாத்தியாயர் 'மொழியியல்' என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு மொழி என்பது சொல் என்பதையும் இயல் என்பது நூலின் பகுதியையும் குறிக்கும்.

மொழி என்பதும் செம்மொழித் தமிழ்க் காலத்தில் 'சொல்' என்ற பொருளிலேயே பெரும்பான்மையும் வழங்கப்பட்டது. இன்று நாம் பாஷை என்ற பொருளில் வழங்குவது அன்று சிறுபான்மை வழக்கே.

7. இலக்கியம்: பொது மொழியியல்

இலக்கியம், மொழியியலாருக்கு ஒரு தரவு (Data) நூலேயாகும். எனவே அதன் அடிப்படையில் ஒவ்வொரு இலக்கியத்திற்கும் ஒரு விளக்க முறை இலக்கணம் எழுதலாம். அப்படி ஒரு காலக்கட்டத்தைச் சேர்ந்த இலக்கியங்களைத் தனித்தனியே ஆராய்ந்து விளக்கமுறை இலக்கணம் எழுதுவது, அகராதி தயாரிப்பது ஆகியவை அடுத்தகட்டப் பணி. அதற்கு அடுத்த கட்டமாக அந்த எல்லா இலக்கியங்களின் இலக்கணங்களையும் தொகுத்து வகைப்படுத்தி அந்தக் காலக்கட்ட மொழி அமைப்பு (Synchronic Grammar) எழுதப்பட வேண்டும். ஒரு காலக்கட்ட அகராதி தயாரிப்புப் பணியும் மேற்கொள்ளப்படலாம்.

ஒரு காலக்கட்டம் என்பது பல நூற்றாண்டுகள் அடங்கிய காலப்பகுதி என்பதாலும், அந்தக் காலக்கட்டத்துக்குள் வேறு வேறு காலப் பிரிவில் நூல்கள் எழுதப்பட்டிருக்கும் என்பதாலும் மொழியியல் அடிப்படையிலும் அந்தக் காலக்கட்டத்தைச் சேர்ந்த நூல்களில் காலவரிசை (Relative Chronology) வரையறை செய்ய முடியும். அதுவே வரலாற்று மொழியியல். ஒரு காலக் கட்டத்தைச் சார்ந்த மொழியின் அமைப்புக்கு உள்ளேயே மூன்று உட்பிரிவாக முன் (early), இடை (middle), பின் (late) என்று பாகுபடுத்துவதும் உலகளாவிய முறை ஆகும். அந்த முறையிலும் மொழியியல் ஆய்வு மேற்கொள்ளப்படலாம்.

ஒரு காலக்கட்டத்தைச் சேர்ந்த நூல்கள் அந்த மொழிச் சமூகத்தின் பல சமூகத்தையும், வட்டாரத்தையும் சார்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கக் கூடும் என்பதால் வருணனை நிலையிலேயே அந்த நூல்களுக்கிடையே காணப்படும் மொழி அமைப்புப் பொதுமைகளை இயற்சொல் வழக்குகளை - தகுமொழி வழக்குகளை (Standard dialect) இனங்காண முடியும். பெரும்பான்மையும் இலக்கியங்கள் தகுமொழி வழக்கிலேயே உருவாக்கப்படும். இருந்தாலும் அந்த ஆசிரியரின் சொந்த வட்டார, சமூக வழக்குகள் அவரை அறிந்தோ, அறியாமலோ பதிவு செய்யப்பட்டிருக்கக் கூடும். அதாவது இலக்கியத்தில் சிறுபான்மை வழக்கு களாகக் காணப்படுபவைகளை அதே கட்டத்தில் வேறு வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிரியரால் எழுதப்பட்ட இலக்கிய வழக்குகளுடன் ஒப்பிட்டால் வட்டாரக் கிளைமொழி (திசைச் சொல் - Regional dialect) வழக்குகளையும், சமூகக் கிளைமொழி (Social dialect) வழக்குகளையும் இனங்காணலாம்.

ஒரு மொழியின் வரலாற்றை மூன்று பெரும் காலக்கட்டங்களாகப் பழங்காலம் (Old period), இடைக்காலம் (Middle period), தற்காலம் (Modern period) என்று பிரித்து ஒவ்வொரு காலக்கட்டமும் முந்திய காலக்கட்டத்திலிருந்து எவ்வாறு மாறுபட்டது, பிந்திய காலக்கட்டமாக எப்படி உருவானது என்ற மொழி அமைப்பின் எல்லா நிலையிலும் ஆராய்வதே மொழி வரலாறு அல்லது வரலாற்று மொழியியல் என்று அழைக்கப்படுகிறது.

உலகெங்கிலும் 19ஆம் நூற்றாண்டில் ஒப்பிலக்கண வரலாறு தோன்றுவதற்கு முன், மொழியியல் ஆராய்ச்சி எல்லாக் காலக் கட்டத்துக்கும் பொருந்தும் இலக்கணமாகக் கருதப்பட்டது. ஒப்பிலக்கண வரலாறு தோன்றிய பிறகு சில மொழிகள் இன உறவு (Genetic Relation) உடையதாக - ஒரு மூலமொழியில் இருந்து தோன்றியதாக ஒரு கருத்தமைவு தோன்றியதால் மொழிக் குடும்பம் (Language family), மொழிக் குடும்பத்துக்குள் நெருக்கமான உறவுடைய உட்பிரிவு மொழியிலிருந்து தனிமொழியாகப் பிரிந்த வரலாறு - தொல் வரலாறு (Pre-history) என்ற கருத்தமைவுகளும் தோன்றின.

இருபதாம் நூற்றாண்டில் தற்கால மொழியியல் ஆய்வு பல்கலைக் கழகங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதால் பல்கலைக்கழக நிலையில் வரலாற்று மொழி ஆய்வும், வருணனை மொழி ஆய்வும் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8. செம்மொழித் தமிழ் இலக்கிய மொழியியல் ஆய்வு

செம்மொழித் தமிழ் நூல்களின் மொழி ஆய்வு பெரும்பான்மையும் விளக்கமுறை ஆய்வாகவே அமைந்துள்ளது. அதாவது தகுமொழி வழக்குகளே பெரும்பான்மையும் ஆராயப்பட்டு வந்துள்ளன. எனவே ஒரு காலக்கட்ட மொழி அமைப்பு ஆய்வாகவே கருதத் தகுந்தது. அதே சமயத்தில் சிறுபான்மையாக வட்டாரக் கிளைமொழி பற்றியும் மிகக் குறைந்த குறிப்புகள் காணப்படுகின்றன.

செம்மொழித் தமிழின் முதல் மொழியியல் ஆய்வாளர் தொல்காப்பியரே. அவருடைய எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் செவ்வியல் தமிழ்க் காலக்கட்டத்தின் மொழி அமைப்பை விளக்கும் ஒரு காலக்கட்ட இலக்கணமே (Synchronic Grammar of Classical Tamil). மேலும் அவர் கோட்பாட்டு நிலையில் மட்டுமே வட்டாரக் கிளைமொழி வழக்குகளைக் (திசைச்சொல்-எச்சவியல்: 4) குறிப்பிட்டுள்ளார். சமூகக்

கிளைமொழி வழக்கைப் பொறுத்தவரை பொதுமைப்படுத்தாமல் ஓர் உதாரணம் மட்டுமே கொடுத்துள்ளார் (எச்சவியல் 49-50). மேலும் தொல்காப்பியர் உறழ்ச்சிகளாக (Free Variations) பல வழக்குகளைக் குறிப்பிட்டுள்ளதிலிருந்து கிளைமொழிக் கோடுகள் (Isoglosses) கண்டுபிடிக்கப்பட்டு நான்கு கிளைமொழிப் பரப்புகள் (Dialect areas) இனம் காணப்பட்டுள்ளன (சண்முகம், 1989: 255). குறிப்பிட்ட நிலையில் மட்டும் வீரசோழியமும் செம்மொழித் தமிழின் சில பண்புகளைக் குறிப்பிட்டுள்ளதாகக் கருதலாம்.

தொல்காப்பிய உரையாசிரியர்களும் தொல்காப்பியத்தில் காணப்படாத செம்மொழித் தமிழுக்குரிய சில மொழிக் கூறுகளை ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளார்கள்.

19ஆம் நூற்றாண்டில் உலகளாவிய நிலையில் கோட்பாட்டு நிலையில் வரலாற்று ஒப்பிலக்கண ஆய்வு தோன்றியதால் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, குடகு போன்ற மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றின் அடிப்படை மொழி அமைப்பு மாறுபட்டது என்றும் எல்லீஸ் போன்றோர் கூறியதைக் கால்டுவெல் (1856) உறுதி செய்து தென்னிந்திய மொழிகள் அல்லது திராவிட மொழிக் குடும்பம் என்ற நூலை வெளியிட்டுச் செம்மொழித் தமிழ் ஆய்வுக்கு வரலாற்றுப் பின்னணியைக் கொடுத்தார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் செம்மொழித் தமிழுக்குரிய இலக்கிய இலக்கணங்கள் அச்சு வாகனம் ஏறியதால் இலக்கண இலக்கிய ஆய்வுகள் பரவலாக்கப்பட்டுத் தற்கால மொழியியல் ஆய்வும் தோற்றம் பெற்றது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் செம்மொழித் தமிழ்மொழியியல் ஆய்வு, பிறமொழியினரால் மேற்கொள்ளப்பட்டு ஆங்கிலத்தில் பல கட்டுரைகளும், சிறு நூல்களும் வெளிவந்துள்ளன. அவை பெரும்பாலும் செம்மொழித் தமிழ் சார்ந்த இலக்கியங்களின் சிறப்புக் கூறுகளை ஆராயும் ஆராய்ச்சிகளாகவே அமைந்துள்ளன. அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் எல்.வி. இராமசாமி ஐயர். அவரின் கலித்தொகை மொழி (1937), திருவள்ளுவர் மொழி (1937), பழந்தமிழ் வினைச் சொற்களின் சொல்லியல் அமைப்பு (1938) ஆகிய கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவை. அவர்தான் முதன்முதலில் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டு நூல்களும் பிற எட்டுத்தொகை நூல்களை விடக் காலத்தால் பிற்பட்டவை என்றும், பின் பழந்தமிழ்க்

(Late Old Tamil) காலத்தைச் சேர்ந்தவை என்றும் குறிப்பிட்டு, சங்கத் தமிழ் நூல்களுக்குள் நூல் வரிசையை நிர்ணயித்தவர்.

ஐரோப்பிய நாட்டார்கள் செம்மொழித் தமிழ் ஆய்வில் சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்தே தொடர்ந்து ஈடுபட்டுப் பல சிறிய நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வருவதும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது.

இங்கிலாந்தைச் சார்ந்த பர்ரோ (1945, 1948) சங்க இலக்கியத் தரவுகளைத் திராவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பயன்படுத்தி, திராவிட மொழி ஒலியன் மீட்டுருவாக்கத்தில் சங்க இலக்கிய மொழியின் பங்களிப்பையும் ஒப்பு நோக்கிக் கால வரிசையையும் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார். செக்கோஸ்லேவியா நாட்டைச் சார்ந்த கூய்ப்பர் (Kuiper) இரண்டு கட்டுரைகள் (1958, 1962) சங்கத் தமிழ் பற்றி எழுதி இருப்பதால் செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத் தகுந்த ஒருவராகிறார்.

ஐரோப்பிய நாட்டு அறிஞர்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர் செக்கோஸ்லேவியா நாட்டைச் சேர்ந்த கமில் செவலபில் (Kamil Zvelebil). அவர் செம்மொழித் தமிழ் மட்டுமல்லாமல் பக்தி இலக்கியம், தமிழில் கிளைமொழிகள், தற்கால இலக்கியம், வாய்மொழிப் பாடல், இலக்கணம் ஆகிய துறைகளில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் கட்டுரைகளும் நூல்களும் எழுதிவருகிறார். தமிழுக்கு வரலாற்று மொழி இலக்கணம் வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார்.

உருசிய நாட்டைச் சேர்ந்த ஆண்டரனோ 1950இலிருந்து முன்னவரைப் போலப் பல துறைகளிலும் செய்துள்ள ஆய்வும் குறிப்பிடத் தகுந்தது. அவரே முதன்முதலில் திராவிட மொழியின் ஆய்வடங்கல்களை வெளியிட்டவர். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த தாமஸ் லெகுமன் & மால்ட்டன் ஆகிய இருவரும் (1997) சங்க இலக்கியச் சொல்தொகை (A word Index for Cankam Literature) என்ற நூலை வெளியிட்டுள்ளார்கள்.

அறுபதுகளில் தமிழகத்தில் மொழியியல் ஒரு பாடமாகவும், துறையாகவும் ஏற்படுத்தப்பட்டதால் தமிழ்மொழியியல் ஆய்வும் குறிப்பாக, செம்மொழித் தமிழ் ஆய்வும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. கேரளப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை வருகைதரு பேராசிரியராக அமர்ந்து சங்க இலக்கிய ஆய்வை ஐம்பதுகளிலேயே மேற்கொண்டதால் பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியம்

தலைமையில் சங்க இலக்கியம் தனித்தனியாக முனைவர் பட்ட ஆய்வுகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர்கள் அகராதி தயாரித்து, வருணனை முறை இலக்கணமும் எழுதினார்கள். பதிற்றுப்பத்து (ச. அகத்தியலிங்கம்), பத்துப்பாட்டு (இராம சுந்தரம்), ஐங்குறுநூறு (இளைய பெருமாள்), நற்றிணை (அ. காமாட்சிநாதன்), கலித்தொகை (ஆண்டியப்பன்), திருக்குறள் (அ. தாமோதரன்), சிலப்பதிகாரம் (ச.வே. சுப்பிரமணியம்) ஆகியோர்களின் ஆராய்ச்சி குறிப்பிடத்தகுந்தது. அதன் விளைவாகப் புறநானூற்று அகராதி (வ.ஐ. சுப்பிரமணியம்), அகநானூற்றின் இலக்கணமும் அகராதியும் (ச.வே. சுப்பிரமணியன்) (1972), சிலப்பதிகாரத்தின் இலக்கணமும் அகராதியும் (ச.வே. சுப்பிரமணியன்) (1965), குறுந்தொகை இலக்கணமும் அகராதியும் (கிருஷ்ணாம்பாள்) (1974) ஆகியவை நூல்களாக வெளிவந்துள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் வழிகாட்டுதலில் சங்க இலக்கியத்தில் பரிபாடல் (சோ.ந. கந்தசாமி), நற்றிணை (நித்யகல்யாணி), திருக்குறள் (பரமேஸ்வரி), தொல்காப்பிய உரை மறுவருணனை ஆய்வு (செ.வை. சண்முகம்) மேற்கொள்ளப்பட்டதோடு, அவரே (1965) ஒரு பருந்துப் பார்வையாகத் தமிழ்மொழி வரலாற்றையும் எழுதி உள்ளது குறிப்பிடத்தகுந்தது. அந்த நூலில் அவர் செம்மொழித் திட்டத் தமிழின் மொழி அமைப்பைத் தொல்காப்பியத் தமிழ், சங்கத் தமிழ் என்று மூன்று இயல்களில் ஆராய்ந்ததோடு அவைகளின் கால வரிசையையும் குறிப்பிட்டுள்ளார். அவர் திருக்குறளைக் கலித்தொகை, பரிபாடலுக்கு முந்தியதாக வரிசைப்படுத்தியுள்ளார். அகத்தியலிங்கம் (1979) பதிற்றுப்பத்து மொழியைக் குறிப்பாக எழுத்தியலையும், சொல்லியலில் வினைச் சொல்லையும் விரிவாக ஆராய்ந்து ஆங்கிலத்தில் ஒரு தனி நூலாக வெளியிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து சங்கத் தமிழ் என்ற (வரிசையில்) ஆய்வும் (5 தொகுதிகள் (1983-1987)) வெளியிட்டுள்ளதில் செம்மொழித் தமிழின் ஒருங்கிணைந்த இலக்கணமாக வினைச்சொற்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். அந்த நூல்களைப் பழந்தமிழ்க் கால நூல்கள் என்று குறிப்பிட்டதோடு, முன் பழந்தமிழ் (Early Old Tamil) பின்பழந்தமிழ் (Late Old Tamil) என்றும் பிரித்துள்ளார். முன்பழந்தமிழில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகியவற்றையும் பின் பழந்தமிழ் நூல்களாகப் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை அடங்கும் எனக் குறிப்பிட்டு

அவை இரண்டுக்கும் உள்ள மொழியமைப்பு வேறுபாட்டையும் முதல் தொகுதியில் விரிவாக ஆராய்ந்துள்ளார். மேலும் பாலசுப்பிரமணியன் (1972), தொல்காப்பிய மொழிக்கும், முருகையன் (1973), கலித்தொகைக்கும் விளக்கமுறை இலக்கணங்கள் எழுதியுள்ளார்கள்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் (தி. நடராஜன், 1977), தொல்காப்பியமும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், தொல்காப்பியமும் மணிமேகலையும் போன்ற தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இவை ஒரு வகையில் செம்மொழித் தமிழ் நூல்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்தி, கால வரிசையை நிர்ணயிக்க உதவுகின்றன.

செம்மொழிக் கவிதைகளில் நோக்கீட்டு இலக்கணம் (A Reference Grammar of Classical poetry) (இராஜம், 1992), என்ற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் கவிதை மொழியையும் மொழி அமைப்பையும் விளக்கும் நூல் ஒன்று வெளிவந்துள்ளது.

இந்த நிலையில் செம்மொழி இலக்கியத் தமிழுக்குப் பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம் (1967-70) ஓர் அகராதி வெளியிட்டுள்ளது. அதில் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வரும் சொற்கள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. **தொல்காப்பியச் சிறப்பகராதி**யும் (தொகுத்தோர் ப.வே. நாகராசன் & த. விஷ்ணுகுமாரன், பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம் - திருவனந்தபுரம், 2000), **தொல்காப்பிய அகராதி**யும் (சென்னைப் பல்கலைக் கழகம், 2004)) வெளிவந்துள்ளன. அண்மையில் **சங்க இலக்கிய வினை வடிவங்கள்** என்ற அகராதி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் வந்துள்ள வினை வடிவங்களைத் தொகுத்து (புலவர். மணியன், 2007) வெளிவந்துள்ளது.

செம்மொழித் தமிழ்க்கால மொழிநிலப்பரப்பு இன்றைய தமிழகம் (சோழ, பாண்டிய நாடு) கேரளத்தை (சேரநாடு) உள்ளடக்கியது. அதற்கேற்பச் சங்க இலக்கியத்தில் சேர நாட்டுப் புலவர்களாக 24 பேர் அடையாளம் காட்டப்பட்டிருக்கிறார்கள். தொல்காப்பியரும், இளங்கோவடிகளும் சேர நாட்டைச் சேர்ந்தவர்களே. திருவள்ளுவர் சேர நாட்டை ஒட்டிய நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர்கள் மொழியை ஆராய்ந்த பொழுது பழைய மலையாள

மொழிக்குரிய கூறுகள் அன்றைய சேரநாட்டு வட்டார வழக்காக இனங்காண முடிகிறது. அந்த ஆய்வை மேற்கொண்டவர்களில் இராஜராஜவர்மா, வையாபுரிப்பிள்ளை, இளையபெருமாள், நாச்சிமுத்து, சண்முகம் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த ஆய்விலிருந்து செம்மொழித் தமிழ்க் காலத்தில் கேரளப் பகுதி தமிழ் பேசும் வட்டாரமாக இருந்தது. தமிழ் இலக்கியங்களும் எழுதப்பட்டன என்றாலும் 9ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு அரசியல் சமூகப் பண்பாட்டுக் காரணங்களால் தனி மொழியாக மாறத் தொடங்கிவிட்டது (சண்முகம், 1977). இதைத்தான் கேரளப் பாணீனிய ஆசிரியரான இராஜராஜ வர்மா (1917),

> **மலையாளத்தில் பழங்குடி மக்கள் தமிழர்கள் என்பதோடு அவர்களது மொழி தமிழாகவும் இருந்தது... செய்யுள் மொழிக்குச் செந்தமிழ் என்றும், நாடோடி மொழிக்குக் கொடுந்தமிழ் என்றும் தமிழ் நூலாசிரியர்கள் பெயரிட்டிருக் கின்றனர். அவ்வாறு அமைந்த பலவகைக் கொடுந்தமிழ்களில் ஒன்று நம்முடைய மலையாளமாய் அமைந்தது**

என்று தன்னுடைய முன்னுரையில் (பகுதி - 4) குறிப்பிட்டுள்ளது இந்தக் கருத்தை வலியுறுத்தும்.

சங்க இலக்கிய மொழியைப் பற்றி மொழிச் சமுதாயவியல் நோக்கில் (Sociology of language) எழுதப்பட்ட ஆசிரியரின் **மொழி வளர்ச்சியும், மொழி உணர்வும் (சங்ககாலம்)** என்ற நூலில் (சண்முகம், 1989) சங்ககாலக் கிளைமொழிகள், தருமொழி (இயல்சொல் - A Standard dialect) மொழிச் சூழல் (அதாவது தமிழகத்தில் வழங்கிய பிறமொழிகள் அவற்றின் தாக்கம்) இலக்கண உருவாக்கம், இலக்கணச் சமூகவியல் ஆகியவைகளின் நோக்கில் தொல்காப்பியம், சங்க இலக்கியங் களுக்குப் பிந்தியது என்று கண்டுணரப்பட்டுள்ளது. இலக்கணக் கூறுகள் ஆகிய ஆராய்ச்சியும் அந்த நிலையில் செம்மொழித் தமிழ்க் காலக்கட்டத்தில் வழங்கிய பிறமொழிச் சொற்களின் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செம்மொழிக் காலக்கட்டத்தில் பாண்டிய நாட்டுத் தமிழே தருவழக்காக வழங்கி இருக்க வேண்டும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

அனவரதநாயகம் பிள்ளை (1919), வைத்தியநாதன் (1971) ஆகியவர்களது பிறமொழிச் சொற்கள் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்

தகுந்தவை. எதிர்நிலையில் தமிழ்ச் சொற்கள் பிறமொழியில் குறிப்பாக வடமொழியில் சென்ற விதம் பற்றியும் ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது (பர்ரோ. 1945).

வரலாற்று நோக்கில் வினைச் சொற்களின் சொல்லியல் ஆய்வைச் சித்திரபுத்திரன் (2005. Tamil Verbal Suffixes - A Study of Tamil Verb System) மேற்கொண்டுள்ளார். பழந்தமிழை முன் பழந்தமிழ். பின் பழந்தமிழ் என்று பிரித்தும். இடைக்காலத் தமிழை முன் இடைக்காலத் தமிழ். பின் இடைக்காலத் தமிழ் என்று பிரித்தும் வினை விகுதிகள் வரலாற்று நோக்கில் அதில் ஆராயப்பட்டுள்ளன. சங்கத் தமிழ்த் தொடரியல் அமைப்பை வரலாற்று நோக்கில் சுசீலா. (2001 - A Historical Study of Old Tamil Syntax) ஆராய்ந்துள்ளார்.

பொருண்மையியல் ஆய்வில் சொற்பொருண்மையியல் (Lexical Semantics) நோக்கில் சங்ககால இயற்பெயர்கள் - சிறப்புப் பெயர்கள் (Proper names) (வ.ஐ. சுப்பிரமணியன். 1965). காலப்பெயர்கள் (செ.வை. சண்முகம். 1980). உறவுமுறைச் சொற்கள் (Kinship terms) (சித்திரபுத்திரப் பிள்ளை. 2000) ஆகியவைகளும் ஆராயப்பட்டுள்ளன.

திராவிட மொழி ஒப்பிலக்கண நோக்கில் தமிழ். பிற திராவிட மொழிகளிலிருந்து குறிப்பாகத் தென் திராவிட மொழிகளான துளு. கன்னடம். குடகு. கோட்டா. தோடா ஆகிய மொழிகளிலிருந்து திரிந்த தமிழின் தொல் வரலாறும் ஆராயப்பட்டுள்ளது (சண்முகம். 1969). அதே முறையில் மலையாளம் தமிழோடு நெருங்கிய உறவு உடையது. தமிழின் கிளை மொழியாக இருந்து தனி மொழியாக ஆகியது. தமிழ். மலையாளம் ஆகிய இரண்டு மொழிகளும் பிற தென்னிந்தியத் திராவிட மொழிகளிலிருந்து மாறுபட்ட மாற்றங்கள் ஆகியனவும் ஆராயப்பட்டுள்ளன (சண்முகம், 1985).

9. மொழியியல் திறனாய்வு

கடந்த பத்து ஆண்டுகளாகச் செம்மொழித் தமிழ் இலக்கியங்கள். மொழியியல் திறனாய்வு என்ற புதுமுறைத் திறனாய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. ஒரு பாடலைத் தரவாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளதால் தொடரியல் ஆய்வுக்கு மேலாகக் கருத்தாடல் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. அதனால் செய்யுளில் வாக்கியங்கள் அடையும் மொழி மாற்றம். வாக்கிய இணைப்புகள். கவிதையில் சொற்கள் பொருள் மாற்றம்

அடைவது ஆகியவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. கவிதையின் முரண்தொடை ஆய்வு என்பது சொற்பொருண்மை (Lexical Semantics) ஆய்வுதான். கவிதையில் காணப்படும் முரண் ஓரளவு செயற்கையாகவும் அமைவதால் (இன்பம்-புகழ்-குறள் 156) அது முரணாக்கம் எனப்படும். முரணாக்கத்தைப் புரிந்துகொள்ளப் பொருண்மைக் கூறு (Componential analysis) என்ற ஆய்வின் இன்றியமையாமையைப் புலப்படுத்தியுள்ளது (அகத்தியலிங்கம், 2000, 2001, சண்முகம் 1998, 2001, 2002). இந்த ஆய்வில் சமூகக் கிளைமொழி, குறிப்பாக - பால் (ஆண்/பெண், வயது, (இளையர், முதியர்), செல்வம் (ஏழை/பணக்காரர்) வேறுபாடு கவிதை உருவாக்கத்தில் கொண்டுள்ள பங்கும் விளக்கப்பட்டுள்ளது (சண்முகம், 2004).

10. முடிவுரை

இந்தக் கட்டுரை பெரும்பான்மையும் அகத்தியலிங்கம் & சக்திவேல் ஆகியோர் தொகுத்த A Bibliograpbhy of Dravidian Linguistics (1973), L.S. இராமையாவின் Tamil Language and Linguistics (1995), அமிர்தலிங்கம் (2000), சங்க இலக்கியக் களஞ்சியம் ஆகிய மூன்று நூல்களின் அடிப்படையிலும், ஆசிரியரின் சொந்த அறிவு அடிப்படையிலும் எழுதப்பட்டுள்ளது.

செம்மொழித் தமிழ் இலக்கணங்களில் தொல்காப்பிய மொழியின் மொழியியல் ஆய்வு, இலக்கண மொழியியல் ஆய்வு ஆகிய இரண்டு நிலையிலும் மேற்கொள்ளப்பட்டுப் பல நூல்களும் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன. மேலும் தொல்காப்பிய மொழி, தொல்காப்பியர் வருணிக்கும் இலக்கணம் ஆகிய இரண்டும் செம்மொழி இலக்கிய ஆய்வோடு ஒப்பீட்டாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. களவியல் மொழியியல் ஆய்வு வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அது இலக்கணச் சமூகவியல் நோக்கில் ஓரளவு ஆராயப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

செம்மொழித் தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரையில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் பழந்தமிழ் நூல்களாகக் கருதப்பட்டு மொழியியல் ஆய்வுகள், வருணனை ஆய்வுகள், வரலாற்று ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. குறள் ஒழிந்த பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள், முத்தொள்ளாயிரம், களவியல் ஆகியவைகளின் மொழியை வருணனை நிலையிலும் ஆராய்ந்து பழந்தமிழ்க் காலமொழிக்குள் அவைகளின் நிலை விளக்கப்பட வேண்டும்.

செம்மொழித் தமிழ் நூல்களின் ஒட்டுமொத்த அகராதி ஒன்றும் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அவற்றுக்கு அடிப்படையாகச் செம்மொழித் திட்டத்தின் கீழ், செம்மொழித் தமிழ் நூல்களுக்குரிய மொழி ஆய்வு பற்றி ஆய்வடங்கல் ஒன்று தயாரிக்கும் பணி தனித் திட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

துணையன்கள்

Agesthialingom, S. 1966 "Tolkappiyar's treatment of Syntax", **Araychi-I**, 238-48, 1969.

" 1977 **A Grammar of Old Tamil with Special reference to patirruppattu** , Annamalainagar.

" 1983-87 **சங்கத்தமிழ்** (5 தொகுதிகள்), அண்ணாமலை நகர்.

" 1997 **சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 1998-99 **கவிதை உருவாக்கம்** (2 தொகுதிகள்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 2001 **தொல்காப்பிய உருவாக்கம்**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

" 2003 **குறள்மொழி**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

" 2004 'தொல்காப்பியத்தின் தனித்துவம்', **தொல்காப்பியத் திறனாய்வுகள்**, (ப-ர்) மீனாட்சி சோமசுந்தரம், ச.மெ.ப. 9-16, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

அகத்தியலிங்கம், ச. & முருகையன் 1972 **தொல்காப்பிய மொழியியல்**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

Agesthialingom, S. & Sakthivel, S., 1973 **A Bibliography of Dravidian Linguistics**, Annamalai University, Annamalai Nagar.

அமிர்தலிங்கம், சு. 2000 **சங்க இலக்கியக் களஞ்சியம்**, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

Anavaratanayagam Pillai, 1991 **Aryan Vocables in Dravidian,** University of Madras, 238-48, 1969.

" 1919 "The Sanskrit in the Vocabularies of the Dravidian languages", **Dravidic Studies,** 9-53, University of Madras.

Andiappa Pillai, D. 1971 **Descriptive Grammar of Kalittogai,** Ph.D. Dissertation, Kerala University.

Andronov, M. 1964 "Materials for a Bibliography of Dravidian Linguistics" **T.C.** XI, I, 3-50.

" 1966 "Materials for a Bibliography of Dravidian Linguistics" University of Malaya, Kualampur.

" 1969 **The Standard Grammar of Modern and Classical Tamil,** New Century Book House Private Ltd., Madras.

" 1972 "Notes on the Nature and Origin of the adjective in Tamil", **IJDL,** Vol. 1, 2 1-9.

Arunachalam, K.P. 1971 "A New theory on appellative Verb (Kurippu Vinai)" **Proc. ICSTS,** 2, 1, 329-33.

Arunachalam, P. 1966 "A Study of itaiccol and uriccol in Tolkappiyam", Seminar on **Grammatical Theories in Tamil,** Annamalai University, Annamalai Nagar.

" 1967 **History of Tamil Syntax upto 1300 A.D.,** Ph.D. Dissertation, Annamalai University, Annamalai Nagar.

Balasubramanian, K. 1972 **A Descriptive Grammar of Tolkappiyam,** Ph.D. Dissertation, Annamalai University, Annamalai Nagar.

" 2001 **Studies in Tolkappiyam,** Annamalai University, Annamalai Nagar.

Beschi, J.C. 1967 **A Grammar of the high dialect of the Tamil Language,** Madras.

Burrow, T. 1938 "Dravidian Studies", **BSOAS,** 9.3.711-22.

" 1945 "Some Dravidian Words in Sanskrit" **TPS,** 79-120.

" 1948 "Dravidian Studies - VII, Further, Dravidian Words in Sanskrit", **BSOAS,** 12, 2, 365-96.

Caldwell, R. 1856 **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages,** London, 1913, Reprint, Madras.

Chatterjee, S.K. 1954 "Old Tamil Ancient Tamil and Primitive Dravidian", **IL,** 14, 1-19. Also **T.C.** 5, 2, 148-74, 1956.

Chithiraputhiran, H. 2002 **சங்கத்தமிழில் உறவுமுறைச் சொற்கள்,** International Institute of Tamil Studies, Chennai.

" 2005 **Tamil Verbal Suffixes** (A Study on Tamil Verb System), Visala Publication, Thanjavur.

Dhamotharan, A. **A Grammar of Tirukkural,** Sud Asien Institute, Heidelberg.

Elayaperumal, M. 1958 "The 'mar' Suffix in Early Tamil Literature", **IL,** 19, 177-84.

" 1970 **The Descriptive Grammar of Ainkurunuru,** University of Kerala, Trivandrum.

Elayaperumal, M. 1971 "Tolkappiyamum malayalamum" (Tolkappiyam and Malayalam), **Ayvukkovai,** 203-08.

Gloria Sundarmurthi 1962 **Morphology of Irayanar Kalaviyal with Index,** M.A. Thesis, Kerala University, Trivandrum.

Israel, M. 1973 **Treatment of Morphology in Tolkappiyam,** Madurai University, Madurai.

Kamatchinathan, A. 1964 **Grammatical Study of Narrinai with text, translation and index,** Ph.D. Dissertation, Kerala University.

Krishnambal, S.R. 1964 Descriptive Grammar of Muttollayiram, M.A. Thesis, University of Kerala, Trivandrum.

Kuiper, F.B.J. 1958 "Two problems of Old Tamil phonology", **IIJ,** 2.1-2, 191-224.

Kumaraswami Raja, N. 1961 **A Philological Study of Kuruntokai,** M.Litt., Thesis (unpublished).

" 1972 'இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர்' - தொல்காப்பிய மொழியியல், ப. 197-206.

Lehmann, T.S. & Malten, T. 1993 **A Word Index for Cankam Literature,** Institute of Asian Studies, Madras.

மணியன், புலவர் 2007 **சங்க இலக்கிய வினைவடிவங்கள்,** பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம், திருவனந்தபுரம்.

Meenakshi, K. 1997 **Tolkappiyam and Astadhyaya,** International Institute of Tamil Studies, Chennai.

Meenakshisundaram, T.P. 1964 "The Initial Monosyllable in Tamil", **IL,** 25, 93-104.

" 1965 **A History of Tamil Language,** Poona.

" 1968 "The Phoneme 'Y' in ancient Tamil", **Studies in Indian Linguistics** (Prof. M.B. Emeneau

Sast part I, Volume) (Ed.) Bh. Krishnamurthi) Poona and Annamalai Nagar, 226-30.

Murugaiyan, K. 1973 **The Language of Kalittogai,** Ph.D. Dissertation, Annamalai University.

Murugarathnam, T. 1996 **A Morphological Study of Ancient Tamil,** Ph.D. Dissertation, University of Madras.

ப.வே. நாகராசன் & த. விஷ்ணுகுமாரன் (தொ.ஆ.). 2000 **தொல்காப்பியச் சிறப்பகராதி,** பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம், திருவனந்தபுரம்.

நாச்சிமுத்து, கி. 2004, 'சங்க இலக்கியத்தில் புவியியல் பின்னணி' **சங்க இலக்கிய ஆய்வுகள் செய்தனவும் செய்ய வேண்டுவனவும்,** ப. 195-219, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

நாச்சிமுத்து, கி. 2005 சிலப்பதிகாரத்தில் மலைநாட்டு வழக்குகள், **சிலம்பு மலர்,** கோவை.

Nithyakalyani, R. 1963 **The Language of Narrinai,** M.Litt. Thesis, Annamalai University.

Parameswari, A. 1961 **The Language of Tirukkural,** M.Litt. Thesis, Annamalai University.

Rajarajavarma 1974 **Ke:ralapa:nini:yam** (Ta.Tr. Elayaperumal, M. 1977), Thiruvanandhapuram.

Rajam, V.S. 1992 **A Reference Grammar of Classical Poetry,** Philadelphia.

Ramanujam, A.K. 1985 **Poems of Love and War,** Columbia University Press.

Ramaiah, L.S. 1995 **Tamil Language and Linguistics,** Madras.

Ramaswami Aiyar, L.V. 1937 'The Language of Tiruvalluvar's Kural', **LIMS,** 28, 194-204.

" 1938 "The Morphology of Old Tamil Verbs", **Anthropos** 33, 747-81.

Sankaran, C. 1951 **Phonemics of Old Tamil,** Deccan College, Poona.

Sathasivam, A. 1958 "The Suffix'ci<u>n</u>' in Cankam Tamil" **T.C.** VII, 2 140-9.

Seethabai, R. 1960 **A Study of Index of words in Tolkappiyam,** M.Litt. Thesis, Madras University.

Shanmugam S.V. 1967 **Naccinarkkiniyar's Conception of Phonology,** Annamalai University.

" 1969 தமிழ்மொழியின் தொல் வரலாறு. **தமிழ்ப் பொழில்,** தொகுதி 43, 8, 236-46.

" 1970 'பழந்தமிழ் ஒலியன்' **தமிழ் அணங்கு,** 7, 8, 9.

" 1971 சங்ககால மொழி அமைப்பு. **ஆராய்ச்சி,** 2, 326-34.

" 1971 Some Problems in Old Tamil Phonology, **IIJ,** 13.1.31-43.

" 1972 'பழந்தமிழில் ஐகார ஔகாரங்கள்', நான்காவது கருத்தரங்க மலர், 368-72, திருவனந்தபுரம்.

" 1972 "Compound Verbal Participants in Old Tamil", **An insight into Tamilology,** 134-39, Coimbatore.

" 1974 பழந்தமிழில் கிளைமொழிகள், **லண்டன் தமிழ்ச் சங்க மலர்,** 58-81, லண்டன்.

" 1977 'Formation and development of Malayalam', **Indian Literature,** XIX 3, 5-30.

" 1980 **எழுத்திலக்கணக் கோட்பாடு,** அண்ணாமலை நகர்.

Shanmugam S.V. 1980 'Time Nouns in Old Tamil' in **Heritage of the Tamils: Language and Grammar**, Pp. 106-16, International Institute of Tamil Studies, Chennai.

" 1984-92 **சொல்லிலக்கணக் கோட்பாடு- தொல்காப்பியம் I-III**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 1985 "Malayalam in Dravidian", **History of Malayalam Language** (Ed. Prabhakaravariar K.M.) Pp. 1-15, University of Madras, Madras.

" 1989 **மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்க காலம்)**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 1994 **இலக்கண உருவாக்கம் (பல்லவர்- பாண்டியர் காலம்)**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 1996 The Concepts of Standard Dialect and Regional Dialects in Tamil Grammars, **Journal of Tamil Studies**, Vol. 49 & 50, Pp. 188-200.

" 1998 **இலக்கியமும் மொழி அமைப்பும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

" 2000 **கவிதை மொழி**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 2002 **குறள் வாசிப்பு**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

" 2003 **கவிதைக் கட்டமைப்பு**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

" 2004 "Sociolinguistics of Literary Discourse", **Journal of Tamil Studies**, Vol. 65, 61-76.

Shanmugam Pillai, M. 1964 "Reconstruction of a:nkaram in early Tamil texts", **IL**, 25, 27-29.

Subash Chandra Bose 2001 **எழுத்தியல் ஆய்வுகள்**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

Subramanya Sastri, P.S. 1934 **History of Grammatical Theories in Tamil and their relations to the Grammatical Literature in Sanskrit,** Madras.

Subramaniyan, S.V. 1965 **Grammar of Cilapatikaram,** Nagercoil.

" 1972 **Grammar of Akananuru with index,** University of Kerala.

Subramoniam, V.I. 1963 **Index of Purananuru,** Trivandrum.

" 1985 'Personal Names in Old Tamil' **Indian Linguistics.** 16. 170-8

Sundaram, R.M. 1964 **Grammatical Study of Pattuppattu with Index, Text and Translation,** Ph.D. Dissertation, Kerala University.

Suseela, M. 2001 **Historical Study of Old Tamil Syntax,** Tamil University, Tanjavur.

Vaidyanathan, S. 1991 **Indo-Aryan - Loan words in Old Tamil,** Rajan Publishers, Madras.

Vaiyapuri Pillai, S. 1990 **History of Tamil Language and Literature** (from the beginning to 1000 A.D.)

" 1951-1952 Tamilum Malayalamum, செந்தமிழ், 47. பக். 87-106.

" 2004 தொல்காப்பிய தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

வேங்கடராஜுலு ரெட்டியார், வே. 1944 எழுத்ததிகார ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

வ.ஜெயதேவன் (பஆ) & ப.வே. நாகராசன் (தொ.ஆ.). 2004 தொல்காப்பிய அகராதி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

Zvelebil, K.V. 1956 "Short remarks of Old Tamil Syntax", **ArO,** 24, 120-22.

" 1957 "Inna:na:rpatu, a study in late Old Tamil Philology", **ArO,** 25, 56-82.

" 1957 "Tentative Periodization of the development of Tamil" **TC,** VI, I, 50-55.

" 1957 "Verbal in Early Old Tamil", **T.C.** VI, 2, 87-91.

" 1958 "Iniyavai na:rpatu, a study in late Old Tamil Philology", **ArO,** 26, 385-426.

" 1958 "Dative early Old Tamil", **IIJ,** 2, 1 (54-65), Also in **TC,** 8, 1, 83-107; 1959.

" 1969 **The language of Perunkunrur Kila:r,** Moscow, Pp. 11-109.

1967-1970 **Index des mot de Literature Tamoule ancienne III,** Vols. French Institute of Pondicherry, Pondicherry.

CLASSICAL TAMIL - LITERARY STUDIES RESEARCHES BY FOREIGNERS

Ulrike Niklas

In this article, I will briefly recall the beginnings of the European study of Tamil, before I turn to an account of the efforts undertaken by members of those nations which had holdings in the Tamil speaking region during colonial times (the French and the British), followed by remarks on works undertaken by Czech, Russian and German scholars. The last part of the article will be devoted to Modern Tamil Literary Studies, including efforts in the U.S.A., international scholarly networks and new developments.

Tamil has a very old history of being "researched by foreigners" - infact, Tamil was the first Indian language that became known in Europe in the 16th century, long before Sanskrit came prominently into the focus (in the 18th century).

THE BEGINNINGS

When the Portuguese came to India at the end of the 15th century, the merchants and the soldiers were quickly followed by Jesuit missionaries. In their pursuit to convert the Indian "heathens" to Christianity, they soon realized that they could not reach the local population by first teaching them the Portuguese language, but that they, in turn, had to learn the local languages - true to the Jesuit saying that "one must know one's enemy well in order to triumph over him". One of the first great missionary projects, initiated by the Spanish Jesuit Francis Xavier in the middle of the 16th century, but then taken over by Portuguese Jesuits, was

the conversion of Tamil speaking Parava fishermen who lived along the cost from Rameshvaram to Kanniyakumari. The Portuguese missionaries established for themselves Tamil language courses for which they prepared materials. At about 1575, a Tamil school for missionaries was established in Punnaikayal, in Tuttukuti (Tuticorin) district. Attached to this school was Henrique Henriques who, in the second half of the 16th century, composed the first foreign Tamil grammar ever written. Since Latin was in Europe the standard language for grammatical description, Henriques applied, as far as possible, the Latin system to the Tamil language, which necessarily had to lead to contortions and misunderstandings. Nevertheless, this method was continuously followed by other Europeans authors, well into the 20th century.

But Henriques, who appears to have mastered the Tamil language quite well, was also the author of a number of translations of Portuguese Christian texts into Tamil, among them two catechisms and a collection of legends of Christian saints. He moreover undertook the first step to get translated Tamil texts printed in original characters. In 1577 the first texts were printed in Tamil letters and thus Tamil was the first non-European language printed in its own characters.

While Henriqes was the first highlight with respect to foreigner's researches on Tamil grammar, Antao da Proenca, a Portuguese like Henriques, became the pioneer in foreign Tamil lexicography. In 1679 his "Vocabulario Tamulico"- a Tamil - Portuguese dictionary for the use of Portuguese missionaries - was printed. This dictionary was the first in line of missionary's efforts to make the Tamil language accessible to Europeans, among them Beschi's Tamil-Latin dictionary (1742; unpublished) and a Tamil-French dictionary (1744; unpublished), de Bourges' Tamil-French dictionary (sometime during the 18th century) which also remained unpublished but nevertheless became the

base of the work by Mousset and Dupuis, and the "Tamil Malabar and English Dictionary" published in 1779 by Johann Philipp Fabricius in Tarankampati. This work has been reedited several times and was last printed again in 1972.

With these remarks, I will leave the field of grammars and dictionaries, which was important to mention in order to indicate how long standing the European acquaintance with the Tamil language has been, and I will turn to the main focus of this article: Tamil **Literary** Studies by Foreigners.

Here again, the first to be mentioned are Christian missionaries who went beyond acquiring a mere working knowledge of the Tamil language and made themselves acquainted with Tamil literature. The two greatest names, certainly, are Roberto de Nobili (1577 - 1656) and Constanzo Beschi (1680-1747). True to their Jesuit missionary zeal, both of them mastered the Tamil language to such an extent that they became original authors of Tamil Christian prose.

Beschi, moreover, composed two grammars (in Latin Language), one was the "common" (i.e. spoken) and one was the "high" (i.e. written) form of the Tamil language (thus as the first European taking clear note of the language's diglossia), adding an Introduction to Tamil Poetry to the latter, thus allowing his European readership a first glimpse into Classical Tamil literary theory.

The first Protestant mission, installed by the Danish king in Tarankampati, was inaugurated and headed by a young German missionary by the name of Batholomaeus Ziegenbalg (1682-1719). Ziegenbalg learned Tamil, other than his Jesuit predecessors, on the Tinnai-schools of the village of Tarankampati and searched the contact of the population. In 1708 he published his translations of Nitivenpa, Konraiventan and Ulakaniti into German. In the same year, he composed an account of Tamil literature, based on 112 works that he mentioned along with short

glosses. Besides Tamil literature, Ziegenbalg also took a great interest in Tamil religion. His two books on this topic earned him the anger of his missionary-station back in Germany, since he was considered "to preach Christianity to the heathens and not to bring heathendom back to Germany" (approximate quotation from a letter from the Halle Mission).

THE FRENCH

Considering the fact that the two largest former French enclaves in India lie inside the Tamil speaking region (Pondicherry and Karaïkkal), it is not astonishing that the French acquaintance with Tamil started quite early and has a continuous history up to the present day. It is astonishing, though, that it was a native Tamil scholar, Maridas Pillai, who in the second half of the 18th century was the first to translate several Tamil texts into French and, although his works first remained unpublished, attracted scholars to initiate a new discipline within Oriental studies in France. Maridas Pillai had translated several astronomical works, a Tamil Panchatantra and a Tamil Bharatam along with a description of the theory of the "five setting" (aintinai). French scholars were sent to Pondicherry where they had the opportunity to gain Pillai's help in the effort to learn about Tamil language, literature, religion and everyday life.

The important breakthrough came in the late 19th century, when Julien Vinson (1843-1926) introduced Tamil studies in Paris at the "Ecole Nationale des Langues Orientales Vivantes". Vinson was a Frenchman who had been born in Karaikkal, where he had also spent the first part of his life. He had translated several Tamil texts into French and had written articles and manuals on Dravidian languages. In 1879 he took over the task of teaching Tamil and other Indian languages at the Ecole Nationale des Langues Orientales, where he was succeeded in 1921 by Jules Bloch. Bloch was a linguist who made important

contributions to the knowledge of Dravidian languages from a comparative point of view. From 1937 till 1951 Bloch taught Tamil at the College de France.

While these developments went on in Paris, at the same time efforts also continued in Pondicherry, with the help of francophone native Tamil scholars. Thus, Gnanou Diagou translated into French the Tirukkural, Nalatiyar and parts of the Kamparamayanam and R. Dessigane the Tiruppavai.

Soon after the French enclaves had been merged in the new Republic of India in 1954, in Pondicherry the French Institute of Indology (later renamed into French Institute of Pondicherry or IFP) was created along with a branch of the Ecole Franchise d'Extreme-Orient (or EFEO), thus allowing French scholarship on India to continue on a permanent base. The Indology department of these institutions was divided into a Sanskrit and a Tamil-section. The first publication to come out of the Tamil section in 1956 was a new edition and French translation of the poems of Karaikkalammaiyar by Karavelane. To date, 16 publications on classical Tamil literature have appeared in this institute, to which names like (among others) those of Jean Filliozat, R.Dessigane, P. Pattabiramine, Francois Gros and T.V. Gopal Aiyar are attached. During the last decade, the study of modern Tamil literature has been taken up additionally and has so far resulted in 4 publications.

THE BRITISH

Disregarding the many grammatical and lexicographical works on Tamil as well as other Indian languages that have been accomplished by British authors, and rather focusing on Tamil literary studies, it becomes obvious that the one Tamil work that had attracted the attention of Europeans more than any other was the Tirukkural. Hence, there are a number of translations of this work into English, from the 18th century onwards.

The first great name that comes to mind is that of G.U. Pope (1820-1907). He made parts of Tamil literature accessible to European students of that language through Readers and Anthologies. But he also published translations and scholarly works on aspects of Tamil literature. His most important achievements are the annoted translation of Tirukkural and Nalatiyar and the edition and annotated translation of Tiruvacakam, his magnum opus in which he also reveals his broad knowledge of Tamil Caiva Cittantam.

A first attempt to present popular Tamil text was the work "The Folk Songs of Southern India" (published in 1893) by Charles E. Gover which contains a section on Tamil songs.

Another milestone in British studies of Tamil literature was the work by John Marr who taught Tamil for many years at the SOAS in London. His book "The Eight Anthologies" represents a first detailed account of Cankam literature and its literary theoretical background.

Other than these, there are a number of translations of minor Tamil works and of extracts from Tamil literature, found in anthological publications. The British interest turned more to linguistic and historical research and was hence not overly productive in literary studies.

EAST-EUROPEAN SCHOLARS

Czech interest in Tamil began already in the 18th century, when the Jesuit Karel Przikryl went to India and during his about 15 year's stay obviously wrote grammars or grammatical sketches of several Indian languages - one among them was Tamil. Unfortunately, only a few pages of his Tamil- manuscript are left. They have been described by Kamil Zvelebil in Tamil Culture IV-4, in 1955. Unfortunately, there was no succession to this early endeavour since the Indology Department of the Karls University at Prague was more interested in Sanskrit-Studies and neglected the Indian South.

It was only in the middle of the 20th century that Kamil Zvelebil, as a student at Karls University, turned towards Tamil and lay the foundation of becoming one of the most important Tamil Scholars in Europe. He was the first to translate large parts of Tamil literature into Czech and in four large oeuvres he established the modern European writing of Tamil literary history. He was also able to establish Tamil-studies in the indological agenda of the Karls - University.

Russian indology is considered to have been founded in the 18th century by G.S. Lebedeff (1749-1817). Lebedeff went to India and lived for 2 years (1785-1787) in Madras, where he studied Tamil, but later on he turned his interest to Bengali.

Tamil was continuously studied by Russian scholars, but rather as one among many Indian languages, and with a clear focus on linguistics and comparative linguistics. A major contributor to this field was A.M. Mervart who, in the early 20th century, stayed for a prolongated period in South India and Ceylon. He authored works on Tamil or Dravidian linguistics, as well as cultural studies and ethnographic reports.

In the 1960s, S. Andronov, a brilliant linguist dealing with Tamil and other Dravidian languages, became well known far beyond Russia. In 1966 he brought out "A Grammar of the Tamil Language" in which he described literary as well as coloquial Tamil and drew attention to regional and social dialects and their differences.

Literary studies and translations from Tamil to Russian remained very few.

GERMAN TAMIL STUDIES

German Tamil studies started, as already told, with Bartholomaeus Ziegenbalg in the early 18th century. Also Fabricius, the author of the "Malabar Tamil-English Dictionary" (1779) mentioned above was of German origin and belonges, as Ziegenbalg, to the Halle-Mission.

In the 19th century, Karl Graul of the Leipzig-Mission travelled to India where he stood on for 4 years. He was to become a major Dravidologist whose contribution laid the basis for further German Tamil literary studies. His 5 vols. work "Journey to East India" gives interesting and valuable descriptions of South India in the 19th century. But his main contribution was the "Bibliothca Tamulica" which in 4 volumes contains German, English and Latin translations of Tamil Vedanta texts and of the Tirukkural, along with notes, explanations and glossaries. He translated several more texts (parts of Civananacittiyar, of the Akapporul and of Tayumanavar). An important contribution was also the collection of 150 Tamil books (in print and hand-copies), which he brought to Leipzig.

In the early 20th century, German indologists began dealing with South India. The most eminent among them was Eugen Hultzsch, Epigraphist to the Government of Madras, who published - among other works - several volumes of "South Indian Inscriptions" (among them the inscriptions of the Tanjavur temple).

More major works on Tamil were then published again by protestant missionaries, among whom Hermann Beythan is well known for his "Practical Grammar of the Tamil Language".

A major contribution to the knowledge of Caiva cittanta literature and philosophy was made by Hilko Wiardo Schomerus (went to India in 1902). He translated into German Manikkavacakars works, the Tiruvatavurar puranam, the Periyapuranam and several smaller Tamil works as well as the Civananacittiyar. He also wrote a large study on Caivacittanta which still today is one of the standard works on this subject. But Schomerus is also known as an author of a number of books on comparative religious studies, mainly dealing with Tamil Shaivism and Protestant Christianity.

With this historical background, it is no wonder that University-teaching of Tamil in Germany was first done in a department of religious an missionary studies, in Halle University by Arno Lehman. But in due course, indological departments of other German universities also took up the teaching and study of Tamil, as in Hamburg, Marburg, Heidelberg and Cologne.

MODERN DEVELOPMENTS

Nowadays, "Tamil studies by Foreigners" are present all over the world, from Japan, through South east Asia (Singapore and Malaysia), India (the French institutions in Pondicherry), Europe, USA and Canada.

During the last ca. 25 years, a general interest in South India has increased, not only on indological studies but also in disciplines like regligious studies, sociology, ethnography and ethnology - otherwise also called cultural anthropology - and cultural studies in general. Thus, a broad and deep scholarly literature has come up on all aspects of Tamil life and culture. We cannot deal with all these aspects within the fold of this brief overview, so we will throw a glance only at some endeavours that deal mainly with Tamil literature and language.

In Israel, David Shulman has brought Tamil literary studies to a peak with several research works (e.g. "Tamil Temple Myths") and translations.

In Canada, two renowned Tamil scholars come to mind, namely Leslie Orr and Brenda Beck. Leslie Orr is deeply involved in Tamil-temple studies including the interpretation of inscriptions. She is moreover one of the few people who have worked on Buddhism and Jainism in Tamilnadu.

Brenda Beck is well known for her work on Tamil folk-literature, mainly on the Annanmar katai. She is at present involved in an interesting project to bring out this

story in the form of animated film-scenes. This underlines her innovative way of working.

In Toronto, moreover, a yearly International Tamil Studies Conference has been installed since 2005.

In the USA, at Berkeley University a Tamil Chair has been endowed in 1995, the chair holder being Prof. George Hart who, since long, has a great name mainly in Tamil literary studies. Hart is the author of several important works on Cankam literature, including "Poets of the Tamil Anthologies: Ancient Poems of Love and War", "The Poems of Ancient Tamil - Their Milieu and Their Sanskrit Counterparts", and of a first full translation of Purananuru, co-authored by Hank Heifetz. Since 2005, Berkeley holds an annual Tamil conference.

Another important place of Tamil research is the University of Pennsylvania, where Prof. Harold Schiffman has installed a first of its kind and ever growing "Web assisted Learning and Teaching of Tamil". Schiffman being a linguist, he is the author of several grammatical works.

William Harman, originally a scholar and Professor of comparative religious studies has worked in detail on an interpretation of the Tiruvilaiyatal-puranam- unfortunately without presenting an full translation of the text- which is still pending and would be one of the important future tasks to undertake.

One of the well known places for Tamil studies has long been the University of Chicago, where A.K. Ramanujan taught until his untimely demise. He was followed by Norman Cutler, a great scholar in Tamil bhakti-literature. He authored among other works "The Songs of Experience: the poetics of Tamil Devotion". - Since 2005, a young German Tamilist, Dr. Sascha Ebeling, holds a tenure track position for Tamil in Chicago. Dr. Ebeling was a student in the Cologne Institute of Indology and Tamil Studies, where he passed his Ph.D. with an excellent dissertation on Tamil literature

of the 19th century. His presence in Chicago is very promising for the future of Tamil studies there, and for the development of a scholarly network.

Two such networks with exclusive reference to classical Tamil literary studies have been formed during the last 6 years.

Thus, the Tamil department of the EFEO in Pondicherry has developed into an important centre for international meetings. Since 2003, a yearly Classical Tamil Winter school of one month is held, organized by Eva Wilden (a German Tamilist, now heading the Tamil Department of the EFEO) and XXX. This yearly event regularly attracts about XXX Tamil scholars and students from different countries. Classical Tamil texts are read, translated and interpreted with the help of Tamil Pandits employed at the EFEO.

Until last year, most of the instruction was done by T.V. Gopalaiyar. Allow me to take this occasion to remember him. His demise has been a great loss to all of us who had the privilege to count among his students.

The other international network that exists expresses itself through a yearly "Classical Tamil Poetics" workshop that has taken place for the last four years. In this workshop, we try to translate and discuss works of Tamil literary theory. (So far, Tolkappiyam Akattinaiyiyal, Iraiyanar Akapporul and Tamilnerivilakkam have been studied). The members of this group are Eva Wilden (originally from Hamburg University in Germany, now at the EFEO in Pondicherry and Paris); Jean-Luc Chevillard (CNRS Paris involved in Tamil grammatical and literary studies);Takanobu Takahashi from Tokyo-University, a scholar in Tamil literature; Literary theory; Sascha Ebeling, Chicago University, a scholar in Tamil Literature; Thomas Lehmann, Heidelberg-University, Germany, where he teaches Tamil grammar, literature and culture; and myself from Cologne University, Germany.

Finally, please, allow me to speak briefly about the situation and the new developments in my own department, the Institute of Indology and Tamil Studies at the University of Cologne, Germany. The institute was founded in 1964 by Klaus-Ludwig Janert who was one of the few indologists of his time to take a deep interest in Tamil studies. Right from the beginning onwards he introduced a course in Tamilistics and he started building up a Tamil library which has by now grown into a collection of almost 50,000 books thus representing the largest Tamil library worldwide outside India. The growth of the Tamil library will henceforth be re-inforced to an additional 1500 to 2000 books per year, additionally to the large collection of Tamil journals that the Institute is subscribed to.

In 2005, the Cologne Institute was threatened by the University's decision to close it down - a fate which had already befallen a number of other indological institutes throughout Europe (among others the institute in Utrecht, Holland, where Kamil Zvelebil had taught Tamil). A worldwide protest of people interested in Tamil made the authorities in Cologne University reconsider their decision. The institute of Indology and Tamil Studies was not closed, but allowed to exist on under the condition that in future it should exclusively concentrate on Tamil Studies.

Nowadays, in the Cologne institute, we try to cover Tamil studies in their full breadth, from classical to modern literature, including folklore. One of the very few international experts on Tamil Muslim literature, Dr. Torsten Tschacher, is a former student of the Cologne Institute and Dr. Sascha Ebeling, whom I mentioned earlier, has passed his PhD at Cologne with an excellent thesis on 19th century Tamil literature.

Through the person of Dr. Malten, the institute very actively participates in projects to digitize Tamil literature, dictionaries etc., thus helping in the effort to bring this

classical language on to a modern platform. In 1998, the Cologne Institute was also the first institution to bring out an online-journal for Tamil studies, called Kolam, which - after a gap of about two years for the purpose of being shifted to Unicode format - will go online again next month.

In near future, we will develop new pedagogical methods and material for the teaching of Tamil as a foreign language, complying with international language- teaching standards.

Tamil culture, too, takes a large space in the activities of our institute: long-standing village studies (partly based on oral literature), and the documentation of traditional arts, crafts and games are an important part of our work. I myself have undertaken a study of Jallikkattu and its literary and ritual backgrounds.

The decision of Cologne University to have the indological institute concentrating on Tamil studies alone was perhaps meant to limit or reduce the size and effectivity of this department. But infact, I see this decision as a great chance for us to convert the institute into an international stronghold of Tamil Studies.

புதுக்கவிதைகளில்
செம்மொழித் தமிழ் மரபுகள்

கே.எஸ். சுப்பிரமணியன்

1. தேடல் களம்

தமிழ் ஒரு செம்மொழி. ஏதோ அரசு அங்கீகார முத்திரை பதிக்கப்பட்டதால் கிடைத்த தகுதி அல்ல இது. பண்டைய செவ்விலக்கியக் கருவூலகங்களால், அறிவுலகம் அளித்த உற்சாகமான அங்கீகாரத்தால் பெறப்பட்ட பெருமை இது.

அறிவுலகத்தால் போற்றப்படும் ஒருசில செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்பது பெருமிதத்துக்கு உரிய ஒன்று. தமிழ் மொழிக்கு இதையும் மீறிய ஒரு . தனிச்சிறப்பு உண்டு. பிற செம்மொழிகள் பெரும்பாலும் வழக்கொழிந்துள்ள நிலையில் தமிழ் இன்றும் வாழும் மொழியாக விளங்குகிறது. உயிர்ப்புள்ள இலக்கியப் படைப்புகளின் களனாக இலங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முந்தைய பண்டைய இலக்கிய மரபின் தொடர்ச்சியாக, பல மாற்றங்களைக் காலந்தோறும் உள்வாங்கி, தன்னைப் புதுப்பித்துக்கொண்டு, இன்னும் புதிய வளர்ச்சிகளுக்கு வழி வகுத்துக்கொள்ளும் பாங்கில் தமிழ்மொழி இயங்கிவருகிறது. இந்தப் பின்புலத்தில், இன்றைய தமிழ் இலக்கியக் களனில், 'புதுக்கவிதை' என்று அறியப்படும் ஒரு பகுதியில் பண்டைய கவிதை இயலின் ஒரு சில கூறுகளை மேலெழுந்தவாரியாக இனம் காணும் ஓர் எளிய முயற்சிதான் இக்கட்டுரை.

தமிழ் மொழியின் இந்த நிலைத்த தன்மைக்கும், இடையறாத தொடர்ச்சிக்கும் அடிப்படைக் காரணியை அடையாளங் காணுதல் சுவையான ஒரு தேடல். 'விருந்தேதானும் புதுவது கிளர்ந்த யாப்பின் மேற்றே' என்ற தொல்காப்பிய நெறியை இந்தத் தேடலுக்கு விடையாக வரித்துக் கொள்ளலாம். யாப்பு காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளதாய் இருத்தல் வேண்டும் என்பதாக மட்டும் இதனைக் கொள்ளக்கூடாது என்பது என் கருத்து. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்ற பரிணாமக் கட்டாயத்தை உணரும் விவேகமே இதன் சாரம். இந்த அடிப்படையில்தான் தமிழ் இலக்கிய மரபு பல நூற்றாண்டுகளாகத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டுப் பரிணாம வளர்ச்சிக்குத்

தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ளது. 'மரபு' என்ற சொல்லின் வேர்ச் சொல் 'மருவு'. 'மருவு' என்றால் மாறுதல் என்ற பொருளும் உண்டு. மாறுதல் என்ற இயங்கு விதியைச் சூல்கொண்ட கருதுகோள்தான் 'மரபு' என்பது மரபு பற்றிய ஆரோக்கியமான புரிதலுக்கு வழிவகுக்கும்.

இந்தப் பின்புலத்தில், தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியத்தையும் தமிழ் இலக்கிய/பண்பாட்டுப் பாரம்பரியத்தின் நாற்றங்கால் களன்களாக இனங் காணலாம். இவற்றில் விரவி நிற்கும் இலக்கிய/இலக்கணக் கூறுகளின் இருப்பையும், எச்சங்களையும், தாக்கத்தையும், பரிணாமத்தையும் இன்றைய இலக்கிய வெளிப்பாடுகளில் அடையாளம் காண முடியும். இது பழமைத்துதி அல்ல. புதுமைக்கும் உயிர்ப்பு நல்கும் பொருளார்ந்த மொட்டவிழ்ப்புக்கான உள்ளீடு; உரம் சேர்ப்பு.

பண்டைய இலக்கண/இலக்கிய மரபுக்கும் இன்றைய படைப்பிலக்கியக் களனுக்கும் உள்ளே நிலவும் தொடர்ச்சியையும், புதுப்பித்தலையும் அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் முயற்சி இது. இதற்கு உதவும் பாங்கில் சில முக்கிய இலக்கிய மரபுக் கூறுகளைத் தொட்டுச் செல்ல விரும்புகிறேன். அகம்/புறம் பிரிவு; திணைக் கோட்பாடு; நோக்கு; உள்ளுறை உவமம்; இறைச்சி; தலைவன்/தலைவி பண்புக் கூறுகள்; புதுப்புலன்கள் - இவற்றைத் தழுவிய கூறுகளை இந்தத் தேடலின் அங்கங்களாகத் தேர்வு செய்துள்ளேன்.

இன்றைய தமிழ் இலக்கியக் களனில் உரைநடை இலக்கியம் முன்னுரிமை பெற்று விளங்குவதை நாம் காண முடிகிறது. அதே நேரத்தில் 'புதுக்கவிதை' என்ற இலக்கிய வடிவம் தன் இருப்பை அழுத்தமாகப் பதிவு செய்து கொண்டு வருகிறது. பண்டைய தமிழ் இலக்கிய/இலக்கண மரபு அடிப்படையில் கவிதை சார்ந்தது; செய்யுள் சார்ந்தது. எனவே இந்த மரபு நீட்சியை இனம் காணும் முயற்சியில் இன்றைய கவிதைக் களம் எவ்வாறு செயல்படுகிறது? எவ்வாறு பண்டைய மரபுக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளது அல்லது மாற்றியுள்ளது என்பதைக் காண்பது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்,

2. அகம், புறம்

முதலில் அகத்திணை, புறத்திணைக் கூறுகளைக் காணலாம். 'அகம்', 'புறம்' என்ற வேறுபாடு ஒரு வகைப் பாட்டியல் ரீதியான சௌகரியம் **(Taxonomic Convenience)** என்று ப்ரம்மராஜன் குறிப்பிட்டு இருப்பது கவனத்திற்குரிய ஒன்றாகும். பொதுவாக அகத்திணை என்பது காதலையும்

பிரிதலையும் பின்பு புணர்தலையும் சுட்டுவதாகவும், புறத்திணை என்பது போரையும் போர் சார்ந்த நிகழ்வுகளையும் வெளிப் பாடுகளையும் குறிப்பதாகவும் இம்மரபு சார்ந்த ஒரு புரிதல் உண்டு. இப்படிப்பட்ட ஒரு வரையறையை அகத்திணையையும் புறத்திணையையும் கட்டிறுக்கமான சிமிழ்களுக்குள் குறுக்கும் அணுகுமுறையாகக் கொள்ளலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. பரந்த கண்ணோட்டத்துடன் பார்த்தால், இன்றைய இலக்கிய வெளிப்பாட்டிலும் கூட அகமும் புறமும் அடிப்படைக் கூறுகளாக விளங்குவதை நாம் காணலாம். ஆனால் இது ஒரு புதிய 'அகம்', புதிய 'புறம்'.இந்த அகத்துக்கும் புறத்துக்கும் உள்ள வரையறை பரந்துபட்டது, நெகிழ்வுத்தன்மை உடையது. இந்த அகம் ஒரு தனி மனிதனின் தன்நிலைப்பட்ட பிரச்சினைகளையும், உள்மன அழுத்தங்களையும், ஆழ்மனதில் நிழலாடும் அதிர்வுகளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். எனினும் ஒரு வரையறை என்ற முறையில் இந்த அகத்தின் எல்லையைத் தனிமனிதப் புள்ளியிலிருந்து மீறி அந்தத் தனிமனிதனைச் சார்ந்த ஒரு வட்டத்தையும் உள்ளடக்கிய தாகக் கொள்ளலாம்; உதாரணமாக அவன் சார்ந்த கருக் குடும்பத்தை. புறம் என்பது அவன் வாழும் வாழ்வுச் சூழல், சமூகச் சூழல், சமூகக் கட்டமைப்பு, பொருளாதார உறவுகள், உற்பத்தி உறவுகள்/ கட்டமைப்புகள், அவற்றின் தாக்கங்கள், சுற்றுச்சூழல் காரணிகள், சமூகத்தில் நிகழும் உரசல்கள், போராட்டங்கள் - இவை அனைத்தையும் தழுவிய ஒன்றாக புறத்தைக் காணலாம். ஆனால் இந்த அகமும் புறமும் ஏதோ தனித்து இயங்கும், ஒன்றுடன் ஒன்று உறவு இல்லாத கூறுகளாகக் காணப்படத்தக்கவை அல்ல. புறத்தின் தாக்கம் இல்லாத அகம் இல்லை. அகத்தின் நிழல் படியாத புறம் இல்லை. இந்தப் புரிதலுடன் அணுகினால், புதுக்கவிதை என்று கூறப்படும் கவிதைக்களனில் இந்த அகமும் புறமும் ஆட்சி செலுத்துவதை நம்மால் காண முடிகிறது.

முதலில் அகம் சார்ந்த ஓரிரு பதிவுகள். வண்ணநிலவனின் 'ஆதிமூலம்' என்ற பெயர் கொண்ட கவிதை. இதன் ஊடாக ஓர் ஆன்மீகச் சரடை நம்மால் தரிசிக்க முடிகிறது.

இதோ கவிதை:

'என்னைப் பிட்டேன்
உலகமாயிற்று
உலகத்தைப் பிட்டேன்
நானானேன்...............'

அடுத்து, சுப்பிரமணிய ராஜுவின் 'கிழம்' என்ற ஒரு கவிதை:

'நேற்றையக் கவலையில்
இன்றைய காலையும்
இன்றைய மாலைக்கு
பிற்பகல் நினைவும்
நாளையப் பயத்தில்
இன்னொரு இரவையும்
கழித்தே நாட்களைக்
கடத்திய பின்
எண்ணிப் பார்த்தால்
'எழுவத்தி நாலு' '

எளிமையான பதங்களைக் கொண்ட இந்தக் கவிதையில் தொனிக்கும் ஆதங்கம் நம் பலரில் உள் அதிர்வுகளை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

புற உலகு பற்றிய புதுக்கவிதைப் படைப்புகளில் சில உரத்த குரலில் பதிவாகி உள்ளனதான். அவற்றை விடுத்து எளிய பொருளில், எளிய சொற்களில் உள் உணர்வுகளைத் தொடும் பாங்கில் படைக்கப்பட்டுள்ள இரு கவிதைகள்.

சுற்றுச்சூழல் இன்று பெரிதாகப் பேசப்படும் பிரச்சினைகளில் ஒன்று. இந்தப் பிரச்சினை குறித்து சிலர் கோஷங்களையும், பிரகடனங்களையும் பதிவு செய்துள்ளனர். ஆனால் ஒரு எளிய நிகழ்வுப் புள்ளியைச் சுற்றி வரையப்பட்ட நுண்ணுணர்வுகளின் ஒலியாக உள்ள மு. சத்தியாவின் 'வார்த்தைகளோடு வாரப்பட்டுவிட்ட மணல்' என்ற கவிதை இதோ:

'இம்முறையும் பாலத்தைக் கடக்கையில்
கண்ணில் நீர் திரையிட்டது.
வறண்டுவிட்ட நதியின்
எஞ்சியிருந்த மணலும் வாரப்பட்டு விட்டது.
அம்மணற்கரையில்தான் நாம்
நம் வார்த்தைகளையிட்டு
மணலுக்குள் மூடிவைத்திருந்தோம்.
இந்நேரம் அவ்வார்த்தைகள்
ஏதோ ஓர் வீட்டின் சுவர்களுக்கிடையே
சிமெண்ட் கலவையால் அறையப்பட்டு
இறுகிப் போய் கிடக்கும்
அழகான மேல் பூச்சுடன்.

தாகத்தைத் தணிக்க
ஒரு குடம்
நீரூற்ற எவருமின்றி
அருகிப்போன ஊற்றுகள் இவற்றோடு
அகண்டும் ஆழ்ந்தும் நெளிந்தும்....
முடிவின்றி போய்க்கொண்டிருக்கிறது ஆறு
இழப்பின் வலியைச் சுமந்து கொண்டு
தன் சுவட்டைத்தானே அழிக்கத் தெரியாமல்'.

தீண்டாமை சட்டரீதியாக ஒழிக்கப்பட்டுவிட்டதுதான். ஆனால் பலவழிகளில் பல செயற்பாடுகள் மூலமாக இந்த அவலம் இன்றும் நிலவி வருகிறது. இது குறித்து காரமான வார்த்தைகளால் உள் உணர்வுகளைச் சினப்படுத்தும் வகையில் பல பதிவுகள் உள்ளன.

மு.முருகேஷ் எழுதியுள்ள ஒரு கவிதையில் ஒரு சிறிய எள்ளலுடன் இந்தப் பிரச்சினை கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

'ஒன்றே குலம்' என்ற முருகேஷ் கவிதை இதோ:

'எங்களூரில்
கீழத்தெரு, மேலத்தெரு கிடையாது.

டீக்கடைகளில்
இரட்டை கிளாஸ் இல்லை.

தேரோடும் வீதியில்
செருப்பணிந்து செல்லலாம்.

பொதுக்கிணற்றில்
நீரெடுக்கலாம்.

எங்களூரில்
வேறு யாருமேயில்லை......
எங்க சாதி சனத்தைத் தவிர'

3. கவிதைப் படைப்புத் தத்துவம்

புதுக்கவிதையில் ஆழ்ந்துள்ள கவிதைத் தத்துவம்; எழுத்துக்கும், சொற்களுக்கும், கவிதைக்கும் உள்ள உறவு; கவித்துவத்தில் சொற்களின் சாத்தியக் கூறுகளைப் பற்றிய கூரிய பிரக்ஞை, பொருளார்ந்த கரிசனை - இந்தக் கூறுகள் இத்துறையில் தீவிரமான ஈடுபாடுடைய பலரின் பொறுப்புள்ள கவனத்தை ஈர்த்துள்ளன. கவிதை படைப்பது ஓர் அர்ப்பணம் சார்ந்த ஈடுபாடு

என்பதைச் சுந்தர ராமசாமியின் கவிதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது. 'எழுத்தின் ரகசியம்' என்ற தலைப்புள்ள கவிதை இதோ:

'பெண்ணே,
உன் கடிதம்.
எழுதுவது எப்படி என்று என்னைக் கேட்காதே.
எழுது,
அதுவே அதன் ரகசியம்.

எழுது.
எவர் முகமும் பாராமல்
உன் மனம் பார்த்து.

உன் தாகம் தீர்க்க
நதியிலிருந்து நீரைக்
கைகளால் அள்ளுவது போல்
கண்டுபிடி உன் மன மொழியை.

மார்புக் கச்சையை முற்றாக விலக்கி
காலக் குழந்தைகளுக்குப் பாலூட்டு

உனக்கும் உன் அனுபவங்களுக்குமிடையே
ஆடைகளை முற்றாகக் களைந்து
அம்மணம் கொள்.

புகை மூட்டத்தைப் புணர்ந்து
மெய்ம்மையைப் பேரானந்தத்துடன் கருத்தரி.

எழுதுவது எப்படி என்று என்னைக் கேட்காதே
எழுது
அதுவே அதன் ரகசியம்'

4. கவிதை மொழி

கவிதை மொழி குறித்து ஆழ்ந்து பொறுப்புணர்வுடன் சிந்தித்து பல கவிஞர்கள் தங்கள் கருத்துகளையும் ஆதங்கங்களையும் பதிவு செய்துள்ளனர். இத்திக்கில், முக்கியமான கவிஞரும், தேர்ந்த இலக்கிய விமர்சகருமான க.நா. சுப்ரமணியத்தின் ஒரு கவிதை, நமக்கு வெளிச்சம் பாய்ச்சுகிறது. இதோ கவிதை:

'கவிதை வேண்டுமானால்
சொற்களைக் கூராக்கு
இசையை ஒதுக்கிவிடு
உருவங்களை உயிராக்கு
சிந்தனைகளை நேராக்கு

உபயோகமற்ற
பாத்திரங்களை
ஏற்றிவைக்கும்
மச்சிருட்டாக
கவிதையை நினைக்காதே.

என்று கூறுகிறார் க.நா. சுப்ரமணியம்.

நல்ல கவிதையில், ஏன் எல்லா நல்ல இலக்கியத்திலும் முக்கியமான அம்சம் ஒரு அனுபவ ஒத்ததிர்வை (**experience resonance**) வாசகர்களிடம் ஏற்படுத்துவது.

க.நா.சு. கூறுவார்:

"நல்ல கவியின் வார்த்தைகள் வாசகனின் உள்ளத்தில் மறைவாகக் கிடக்கிற அனுபவங்களில் ஏதோ ஒன்றை பாதாளக் கரண்டி போல் பற்றி இழுக்கிறது. நமது உறங்கிக் கிடக்கும், நம்மிடமுள்ளதாக நாமே அறியாத அனுபவங்களை எழுப்பவல்லதாக இருக்கிறது."

கவிதைக்கும் கவிஞனுக்கும் உள்ள உறவை, இதில் வார்த்தைகளின் பங்கை, மிகவும் உள்ளுணர்வுடன் பதிவு செய்கிறார் அபி:

"வார்த்தை எவ்வளவு வலுவானதாக இருந்தாலும் சமயத்தில் வார்த்தை ஒரு சாக்கு. வார்த்தைக்கு இது தெரியும். கவிஞனுக்கும் இது தெரியும். இவர்களிடையே இது ஒரு கபட உடன்பாடு."

மேலும் அபி கூறுவார்:

"சற்று முன்பு ஒளியாய் மின்னிய என் கவிதைகள் இப்போது இருளாய் மின்னின. கவிதையின் தீட்சண்யம் ஒளி வடிவு மட்டுமா? தீட்சண்யமான இருள் வடிவிலும்தான் அது இருக்கிறது. பார்வைக்குப் பிடிபடும் ஒளியின் அடியில் தேங்கி மறைந்துள்ள இருள் சமுத்திரம் கவிதையில் கொந்தளிக்கிறது.... வெட்ட வெளிச்சம் என்று சாதாரணமாக நினைக்கிற விஷயங்களிலும் ஆங்காங்கே புகைமூட்டம் தெரிகிறது. எந்தத் தயக்கத்தின் பின்னாலும் ஒரு கணப்பிளவில் ஒரு இருள் நின்று காட்டிவிட்டுப் போகிறது."

இவை போன்ற பிரச்சினைகளை, தீர்வுகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு அனுபவம் போன்றது கோ.ராஜாராமின் 'தவம்' எனும் இந்தக் கவிதை

'கடலின்
தரை பரவும் ஆழத்தில்
வாய் திறவா சிப்பிகள்;
கொடியில்
நுனித்தண்டு அசைவினிலே
குவிந்தமுக மொட்டுக்கள்;
மனதின்
புதைகுழிப் பொறுமலிலே
கவிதைக்கரு வித்துக்கள்;
சிப்பிகள் -
முத்துக்களை உமிழவில்லை.
மொட்டுக்கள் -
இதழ் விரித்துச் சிரிக்கவில்லை.
வித்துக்கள் -
கவிதையுருக் கொள்ளவில்லை.
ஏதோ ஒரு கரத்தின்,
ஏதோ ஒரு காற்றின்
ஏதோ ஒரு ஒளியின்
ஸ்பரிசத்துக்காகத்
தவம் இருக்கின்றன'

இத்தருணத்தில் ஒரு நன்னூல் சூத்திரத்தை நினைவு கூரலாம். ''பொருட்கு இடனாகி உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வது செய்யுள்'' என்கிறது நன்னூல். சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள உறவை வடுப்படுத்தக் கூடாது; நுண்ணுணர்வு கவிதையின் முக்கிய அங்கம்; அழகியல் பார்வை கவிதையின் உயிர்நாடி - இதை இந்தச் சூத்திரத்தின் சாரமாகக் கொள்ளலாம். இந்தக் கூறுகளைப் புதுக்கவிதைக் களத்தின் அடிப்படைக் கரிசனைகளாகக் காணலாம்.

5. திணைக் கோட்பாடு

அடுத்ததாகத் திணைக் கோட்பாட்டின் இன்றையத் தாக்கங்களை, இன்றைய பரிணாமங்களைச் சுருக்கமாகப் பார்க்கலாம். பௌதீகச் சூழல் சார்ந்த பகுதிகளாகத் தமிழ் நிலப்பரப்பைக் கண்டு, அவற்றை ஐந்து திணைகளாக (Eco-

regions) இனம் கண்டு, இலக்கிய மரபில் ஒரு அங்கமாக வரித்துள்ளது கவிதை இயலில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பு. அனைத்துலக இலக்கிய மரபில் பொருளார்ந்த இந்தத் திணைக்கோட்பாடு இன்றும் ஒரு யதார்த்தக் கோட்பாடுதான். ஆனால் திணைகள் சார்ந்த எல்லைகளை நோக்கும்போது இன்று ஒரு புதுக்கோண அணுகுமுறை தேவை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. நகரமயமாதல், வணிகமயமாதல், இடம் பெயர்ச்சி (spacial mobility) முதலியவை ஒரு சில காரணிகள். தொழில்நுட்பத்தின் தாக்கத்தால் உலகமே ஒரு குவலய கிராமமாகச் சுருங்கிவிட்டது. தகவல் தொழில்நுட்பத் தாக்கத்தால், ஒளிபரப்பின் பரந்துபட்ட வீச்சால் நிகழ்ந்துவரும் பன்முகப்பட்ட பண்பாட்டுத் தாக்கங்களின் மூலமாகப் பீறிட்டுவரும் நுகர்வுக் கலாச்சாரம்; எதிர்பார்ப்பு வளர்ச்சி (the crisis of rising expectations) இவைபோன்ற பல காரணிகளைக் காட்டலாம். இவற்றின் மூலமாகத் திணைக்கோட்பாடு பெருமளவு துல்லியமற்ற புகைமூட்டமான ஒரு கோட்பாடாக மாறி வருகிறது. பண்டைத் தமிழ் இலக்கண மரபிலேகூட திணை மயக்கம் என்ற கருதுகோள் அங்கீகாரம் பெற்றிருந்தது. இந்தத் திணை மயக்கம் இன்றும் ஒரு யதார்த்தமாக நிகழும் அதே நேரத்தில் திணை இழப்பு சார்ந்த வலி ஒரு முக்கிய சமூக, வாழ்வியல் கூறாகப் பேருருக் கொண்டுள்ளது. இதன் மூலமான விளைவு உள்மனக் காயமாகவும், சிராய்ப்புகளாகவும், ஆதங்கங்களாகவும் விரவி நிற்கிறது. இந்தப் பிரச்சினையின் பரிமாணங்களைப் பல கவிஞர்கள் பதிவு செய்துள்ளனர். இதன் ஒரு முக்கிய பதிவாக 'புது மார்கழி' என்ற இளம்பிறையின் கவிதை அமைகிறது.

"மாநகர் வந்து
மாதங்கள் பல ஓடி விட்டன
பொருட்களை
ஏற்றி வந்துவிட்டேன் அப்போதே.
வராமல் அடம் பிடித்துக் கொண்டிருக்கும்
இந்த மனசைத்தான்
எப்படிக் கொண்டு வருவதென
தெரியவில்லை.
வாசல்களில் போடப்படும்
கோலங்களைப் பார்த்துப் பார்த்துதான்
மார்கழியை உணர முடிகிறதிங்கு.
அருகம் புல்லில் துளிர்த்திருக்கும்
பனித் துளிகளை
மிதித்து......உடைத்து

முழங்காலுக்குக் கீழ் நனைந்த துணியின்
குளிர்ந்த ஒட்டலோடு
பூப்பறிக்கவோ.......புல்லறுக்கவோ
முள் கீறி
இலந்தைப் பழம் பொறுக்கவோ
படிக்கவோ......எழுதவோ செல்லாத
என் முதல்
மாநகர் மார்கழி இது."

6. பெயர் சுட்டாமை

அகத்திணை மரபில் இன்னொரு சுவையான கூறு ஒரு குறிப்பிட்ட ஆணோ, பெண்ணோ, பெயரால் இனம் காணத்தக்க தலைவனோ, தலைவியோ இடம்பெறாமை. 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும் சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்' (தொல். 1000) என்ற தொல்காப்பிய நூற்பா இந்தக் கொள்கையை அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறது.

கவிதைத் தலைவிக்கோ தலைவனுக்கோ கவிதை மாந்தருக்கோ ஒரு குறிப்பிட்ட பெயர் சுட்டாமல் இருப்பது புதுக்கவிதை மரபில் ஒரு முக்கிய அம்சமாகக் காணப்பெறுகிறது. இந்தச் செல்நெறி பண்டைய தமிழ் மரபின் ஒரு நீட்சியாகக் காணத்தக்கது.

இது குறித்த ஒரு விளக்கம் தேவை. இப்படிப் பெயர் சுட்டப்படாத கவிதைமாந்தர் பெயர் இல்லா பூச்சிகள் அல்லர். ஒரு குறிப்பிட்ட ஆளுமையின், மனோ நிலையின், உணர்ச்சித் துடிப்பின் வார்ப்படங்கள் இவை. ஒரு பொதுமைப் பண்பு, குறியீட்டு வீரியத்துடன் தனிமனித அடையாளத்தை மீறித் தன் பிரசன்னத்தை வெளிப்படுத்துவது இதன் உயிர்நாடி. புதுக்கவிதையில் மட்டுமின்றி இந்த போக்கை நவீன ஓவியங்களிலும் நவீன சிற்பங்களிலும் காண முடிகிறது என்பது ஒரு சுவையான தகவல்.

7. ஜனநாயகப்படுத்தல்

தமிழ் பண்டை இலக்கிய மரபில் 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்ற பார்வை இருந்தது. மேலும் தலைவன், தலைவியின் குணநலன்களில் பிறப்பு, குடிமை, ஆண்மை, நிறை, திரு அல்லது செல்வம் போன்ற கூறுகளையும் இம்மரபு இனம் காணுகிறது. இவற்றில் மேல்மட்டச் சார்பு (elitist bias) இருப்பதை நம்மால் காணமுடிகிறது. ஆனால் நவீன தமிழ்

இலக்கியக் களனில் (புதுக்கவிதைக் களனும் இதில் அடங்கும்) இந்த மேல்மட்டச் சார்பு ப்டிப்படியாகத் தவிர்க்கப்பட்டு வேர்மட்டச் சார்பாக மாறி வந்துள்ளது; மாறி வருகின்றது.

சமூகத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள், சமூகத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள், சமூகத்தால் சபிக்கப்பட்டவர்கள், சமூக ஒழுக்க நெறிகளின் வரம்புகளை மீறுவதால் தண்டிக்கப் படுபவர்கள் - இதுபோன்ற பல சமூக உறுப்பினர்கள் கதை மாந்தர்களாக, பாட்டுடைத் தலைவராகச் சுவீகரிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு முக்கியமான, ஜனநாயகப்படுத்தப்படும் திக்கில் விளங்கும் மடைமாற்ற நிகழ்வு. இதுபோன்ற மாற்றங்கள் நிகழா விட்டால் மேல்தட்டு சார்ந்த பல இயல்புநெறிகள் உடைபட்டுக் காலத்தால் சவமாய்ப் போய்விடும் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

8. அழகியல் கூறுகள்

அகத்திணைக்குரிய உள்ளுறை உவமக்கோட்பாடு புதுக்கவிதைக் களனுக்கு மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள்முடிக என
உள்ளுறுத்து இறுவதே உள்ளுறை உவமம் (தொல்.994)

என தொல்காப்பியம் இதனை இனம் காட்டுகிறது. இதன் உயிர்நாடி இதுதான், 'உவமிக்கப்படும் குறிப்புப் பொருள் மறைந்திருக்கும் உவமையே வெளிப்பட்டு நிற்கும்.' மேற்கோளாக, குறுந்.278ஐ நோக்கலாம்

". . . கடுவன்
ஊமுறு தீங்கனி உதிர்ப்ப, கீழ் இருந்து
ஓர்ப்பன ஓர்ப்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலை இறந்தோரே"

ஆண் குரங்கு முதிர்ந்த இனிய பழங்களை மரத்தில் ஏறி உதிர்க்கிறது. கீழே அவற்றைக் கண்டு ரசித்து உண்ணும் குட்டிகளுடன் பெண்குரங்கு. இவையுள்ள மலைகளைக் கடந்து தலைவன் செல்கிறான் - இது வெளிப்படை. உணர்த்துவதோ தன் மகவுடன் தலைவன் வருகைக்காக ஏங்கி நிற்கும் தலைவி. இது போன்ற ஒரு சித்திரத்தைப் புதுக்கவிதையிலும் இனம் காண முடிகிறது. கல்யாண்ஜியின் 'அலைதல்' என்ற கவிதையை நோக்கலாம்.

"இக்கரைக்கும் அக்கரைக்கும்
பரிசல் ஓட்டிப் பரிசல் ஓட்டி

'எக்கரை
என் கரை?'
என்று மறக்கும்
இடையோடும் நதிமெல்லச்
சிரிக்கும்.''

இது ஏதோ இக்கரைக்கும் அக்கரைக்கும் இடையே சென்றுகொண்டுள்ள பரிசலின் கதையன்று; இலக்குத் தெளிவின்றி இங்கும் அங்குமாக அல்லாடித் திரியும் மனித வாழ்வின் அவலத்தின் படப்பிடிப்புதான் இது.

அகத்துறையில் இடம்பெறும் இன்னொரு நுண்ணிய கோட்பாடு இறைச்சி.

''இறைச்சியில் பிறக்கும் பொருளுமாருளவே
திறத்தியல் மருங்கில் தெரியுமோர்க்கே'' (தொல். 1176)

என்கிறது தொல்காப்பியம். ஆழ்ந்து பொருள் காண்போர்க்கு இவ்விறைச்சியில் தோன்றும் குறிப்புப்பொருள் புலப்படும் என்பார் தொல்காப்பியர்.

வெறும் அடைமொழிகளாய், இயற்கை வருணனையாய்த் தோன்றும் சொற்களில் குறிப்புப்பொருள் சூலுற்று இருப்பதே இறைச்சியின் உயிர்நாடி. இந்தக் கோட்பாட்டின் இன்னொரு சிறப்பு, மரம், செடி, கொடி, பறவை, விலங்கு ஊர்வன இயங்கு திணைப் பொருள்களாக விளங்குவது.

உயிர் இனங்களின் அன்பு வாழ்வைக் காணும்போது தலைவன் கட்டாயம் விரைவில் இரவில் தலைவியை வந்தடைவான் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டும் பாங்கில் இறைச்சி அமைகிறது. கலைமான் பிணைமானைத் தழுவுதல்; கள்ளியில் இணையைத் தேடும் பல்லி எழுப்பும் 'இச்', 'இச்' எனும் ஒலி; பாம்புகள் பின்னிப் பிணையும் காட்சி; பனைமரத்து உச்சியில் மடலில் கிடந்து நள்ளிரவில் அன்றில் முனகும் ஒலி - சித்திரங்கள் சுருள்சுருளாய் விரிகின்றன. இத்தருணத்தில், கவிஞர் ஆனந்த் படைத்துள்ள 'இருந்த இடத்தில்' என்ற தலைப்புள்ள கவிதை நினைவுக்கு வருகிறது.

இருந்த இடத்தில்
இருந்த படியே
நீ இரு
நான் வருவேன்
உன் கால்களை வருடிச் செல்லும்
நீரெல்லாம் கழிந்தபின்னே

இந்தக் கோட்பாட்டுக்கு ஒரு மேற்கோளாக இக்கவிதை அமையுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. மேலெழுந்த வாரியாக நாம் காணும் பொருளுக்குப் பின்னால் பொதிந்துள்ள ஆழ்ந்த அர்த்தத்தை நாம் தரிசிக்க வேண்டும். கவிதை கவிஞனுடன் சொல்லாடுவதாய் இக்கவிதையைக் காணலாம். "நீ வார்த்தைகளைத் தேடிக்கொண்டே இரு. ஒரு காலகட்டத்தில் வார்த்தையின் வெறுமையை நீ உணர்வாய். அப்போது நீ கவிதையை அதாவது என்னை தரிசிப்பாய்" இவ்வாறு இதற்குப் பொருள் காணலாம் என்று நான் எண்ணுகிறேன்.

9. புதிய புலன்கள்

நவீன கவிதை மரபில் ஜனநாயகப்படுத்தும் செல்நெறி பரவலாக உள்ளது என்பதை முன்பே கண்டோம். இந்த ஜனநாயகப் படுத்துவதில் இரண்டு முக்கியமான வெளிப்பாடுகள் பெண் சார்ந்த, தலித் சார்ந்த கவிதைப் படைப்புகள். சங்க காலத்தில் ஒரு சில பெண் புலவர்கள் இருந்தார்கள்தான், மாபெரும் நிகழ்வான (**Phenomenon**) அவ்வை உட்பட. அதன் பிறகு பக்தி இலக்கிய காலத்தில் ஆண்டாளையும் காரைக்கால் அம்மையாரையும் நாம் காண்கிறோம். அதன் பிறகு பல நூற்றாண்டுகளாக வறட்சிதான். இந்த வறட்சிக்கான யதார்த்தப் பின்னணியை எளிதாக உணர முடிகிறது. பெண் முன்னேற்றம் அடைந்தால்தான், தன் ஆளுமையை முழுமையாகப் பிரதிநிதித் துவப்படுத்தும் வாய்ப்புகள் அவளுக்கு இருக்கும்போதுதான், படைப்பிலக்கியத்திலும் அவளது பிரசன்னம் நிகழ்கிறது.

இன்றைய கவிதைக்களனில் உயிர்ப்புள்ள, பொருண்மை உள்ள, ஓரளவு சினத்தைச் சூலுற்ற பல அழகான கவிதைப் பதிவுகளை இன்றைய பெண் கவிஞர்களிடம் இருந்து நாம் பெற்றுள்ளோம்.

ஓரிரு மேற்கோள்கள், இன்றைய அவலத்தின் வேரையே இனங்காணும் பாங்கில் கனிமொழியின் கவிதை இதோ.

"எமக்கு என்று
சொற்கள் இல்லை.
மொழி எம்மை
இணைத்துக்கொள்வதுமில்லை.
உமது கதைகளில்
யாம் இல்லை,
எனக்கென்று சரித்திரமில்லை.

நீங்கள் கற்றுத் தந்ததே நான்
வார்த்துத் தந்ததே நிஜம்.
எனக்கென்று கண்களோ,
செவிகளோ, கால்களோ
இல்லை.
அவ்வப்போது நீ இரவலாய்
தருவதைத் தவிர."

மேலே கண்ட கனிமொழியின் கவிதை இன்றைய சமூகச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலத்தின் கூறுகளை இனங் காணுகிறது. இதைத் தொடர்ந்து, "நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின" என்ற சூளுரையின் எதிரொலி போல் ஒரு பெண் கவிஞரின் குரல். "நாங்கள் எங்கள் ஆளுமையை வீரியத்துடன் பதிவு செய்ய வந்துள்ளோம். இத்திக்கில் உங்கள் கருணைக்காகக் கப்பறை ஏந்தி நாங்கள் வரவில்லை. நாங்கள் வீறுகொண்டு எழும் உண்மையைப் பறைசாற்றவே வந்துள்ளோம்" எனும் பாங்கில் 'எரிசக்தி' என்ற குட்டி ரேவதியின் கவிதை.

"வலிகளை உச்சரிக்கத்தெரியாத
வழிகளைத் தேடி அலையாத
புடவை ஒதுக்கி நடக்கும்
பெண்களைத்தான் உனக்குப் பிடிக்கும்....
ஆனால், உணர்வுகளின் குவியல் நான்
ஒளி தேசத்தில் வாழ விரும்பும்
விடுதலைப் பறவை....
ஒரே பிறப்பில்
அழவும் சிரிக்கவும் ரசிக்கவும்
பொழியவும் எரிக்கவும் மகிழவும்
அழியவும் ஜனிக்கவும் பூத்தவள்....
மண்வாசனையும் மலைத்திமிரும்
நதியோட்டமும்
என்னுள் கிளர்ந்தெழுவதைக்
கட்டுப்படுத்த இயலவில்லை!
நவதுவாரங்களின் வழியாகவும்
கனவுகள் பீறிடுகின்றன.
ஜனங்கள் திரளும் நிஜக்காட்டில்
வேட்கை பெருகப்பெருக
வேட்டையாட அலைகின்றேன்.

கன்னத்தில் உருண்டு உதிரும்
கண்ணீர்த் துளிகளைச் சாட்சியாக்கி

உன்னிடம் கருணை சம்பாதிப்பதில்
எனக்குப் பெருமையேதுமில்லை."

அடுத்து, தலித் கவிஞர்களின் கவிதைப்படைப்புகள் இன்றைய புதுக்கவிதைப் பரப்பில் முக்கியமாக இனம் காணத் தக்க, வரவேற்கத்தக்க வரவுகள். தலித் படைப்புகளில் ஒரு முக்கிய அம்சம் காலங்காலமாகப் போற்றப்பட்டுவரும் பல அழகியல் கூறுகளை அவர்கள் தீவிரமாகக் கேள்விக்கு உள்ளாக்குகின்றனர். புதிய அழகியல் நெறிகளைத் தாங்களாகவே வகுத்துக் கொள்கிறார்கள்.

"எங்களது சொல்லாட்சியால் நீ முகம் சுளித்தால் பிரச்சினை உனக்குத்தான். பறையடித்தல் என்ற சொல் எங்கள் இனத்தின் கீழ்மைக்கும் வீழ்ச்சிக்கும் அடையாளம் என்று கூறி வந்தீர்கள். நாங்களும் அதையே நம்பினோம். ஆனால் இந்தப் பறையும் பறையொலியும் எங்கள் விடுதலையின், விழிப்புணர்ச்சியின், புத்துயிர்ப்பின் அடையாளம்" என்று திண்ணமுறக் கூறுகிறார்கள்; அன்பாதவனுடைய 'நெருப்பில் காய்ச்சிய பறை' என்ற கவிதை இதோ:

"காய்ச்ச காய்ச்ச
இறுகுகிறது எம்பறை
நெருப்பின் தகிப்பில்
பொங்கியெழும் பெருமுழக்கம்
சிறுதீண்டலிலும்
காற்றின் அணுக்களில்
பேரலையாய் அதிர்வுகள்
இசையின் திசைகளில்
கலந்திருக்கிறது. எம் உயிர்
திரண்ட பறைகளின்
குமுறல்களில் பொங்கும்
யுகங்களின் கோபம்
மறுக்கப்பட்டவர்களின் மனதாக
ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக"

10. 'நோக்கு' என்ற கருதுகோள்

'நோக்கு' என்ற கருதுகோள் தமிழ் இலக்கிய மரபில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. முதலில், ஆதி நூலான தொல்காப்பியத்துக்கே செல்வோம்.

'மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே'

எனச் செய்யுளியல் கூறுகிறது. இதில் 'நோக்கு' என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கும் பாங்கில் நச்சினார்க்கினியர், "கேட்டோர் மீண்டு நோக்கி பயன் கோடலை உடையவாகச் செய்யும் கருவியை நோக்கு என்று பெயர் கூறப்படும்" என்கிறார். இதனின்று அறியத் தக்கது யாது? இலக்கியத்துக்கு (செய்யுளுக்கு, கவிதைக்கு) 'நோக்கு' தேவை. 'நோக்கு' தனித்தியங்குவதன்று. இது 'பயன்' பெறுவதற்கு உதவும் கருவி, அதாவது பயனுடன் இணைந்து செயல்படுவது. இது இன்னொரு வினாவை எழுப்புகிறது. 'பயன்' என்ற கருதுகோளின் பொருள், பரிமாணங்கள் யாவை? நன்னூலின் துணையுடன் இதற்குத் தெளிவு தருகிறார் ஜெயகாந்தன்.

> "தமிழிலக்கணமே நூலினியல்பாவது என்னவென்று சொல்லும்போது, 'நூலினியல்பே நுவலின் ஓரிரு பாயிரந்தோற்றி, மும்மை யினொன்றாய் நாற் பொருட்பயத்தோடு எழுமதந்தழுவி' என்று நூலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு அதற்கும் மேல் புதியதாய் எழுகின்ற ஒரு கொள்கையைத் தழுவியும் இருக்க வேண்டும் என்று, நான்கு பயனுக்காக என்று சொல்லி, அதன் பின்னர் தான் பத்துக் குற்றம், பத்தழகு, முப்பத்திரண்டு உத்தி முதலிய இலக்கண விளக்கங்களைக் கூறிச் செல்கிறது"

என்கிறார். எனவே இலக்கியப் படைப்பாக்கத்தில் 'நோக்கு' அல்லது 'குறிக்கோள்' தேவை. இந்த 'நோக்கு' பன்முகப்பட்ட பயன்களைத் தழுவியதாக இருக்க வேண்டும்.

'நோக்கு' புதுக்கவிதை சார்ந்த சொல்லாடலில் பொறுப்புள்ள கரிசனையை ஈர்த்துள்ளது. 'நெம்புகோல் கவிதைகள்' மூலம் சமூகச் சீர்திருத்தத்துக்கு வழிவகுப்போம் என்ற 'வானம்பாடி'களின் சற்றே உரத்த குரல்; பெண் விடுதலை எங்கள் பிறப்புரிமை, அதைப் பெறத் துணிந்து விட்டோம் என்ற பெண்ணியப் பதிவுகள்; காலங்காலமாய் எங்களை அமுத்திக் கொண்டிருக்கும் அடிமை நுகத்தடிகளை உடைத்து நொறுக்கக் களம் இறங்கிவிட்டோம் என்ற தலித்தியக் கவிதைக் கங்குகள்; அரசியல், சமூக அவலங் களையும், நாணயமின்மையையும் தோலுரிக்கும் சினமும், எள்ளலும் - தனக்குள்ளே பிளவுற்று, காயமுற்று, ஆழ்மனப் புழுக்கங்களைத் தாங்கும் உள்மனப் போராட்டங்களின் அனுபவ அதிர்வுகளை, வார்த்தைகள் மூலமும், கனமான மௌனங்களின் மூலமும் வெளிப்படுத்துதலே எங்கள் கவிதைப் பணி என்ற பதாகை.

இவ்வாறு பல நோக்குகள், பல இலக்குகள் புதுக்கவிதைக் களனில் நிலைபெற்றுள்ளன. 'நோக்கு' என்ற மரபுக் காரணியை ஏற்றுக் கொண்டு, அதற்குப் புதிய பொருண்மையையும், வீச்சையும் புதுக்கவிதை கொடுத்து வருகிறது என்பது கவனத்திற்குரியது.

11. நிறைவாக

நிறைவாக ஒரு கருத்து. நாம் தான்தோன்றியாக உதித்து, தனிவெறிக் கூத்தாடிவிட்டு மறைபவர்கள் இல்லை. ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. அதை ஒட்டிய பாரம்பரியம் உண்டு. இவற்றின் ஊடாகப் பரிமளிக்கும் பண்பாடு உண்டு. நாம் அறிந்தோ அறியாமலோ இந்தப் பாரம்பரியமும் பண்பாடும் சமூகத்தின் உள் உணர்வுடன் இணைந்து செயல்படும். அதேநேரத்தில் பாரம்பரிய ஊற்றுக்கால்களில் இருந்து சத்தையும் சாரத்தையும் உள்வாங்கிக்கொள்வது செழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

ஆனால் இங்கு ஒரு சவால் உள்ளது. இவ்வாறு நமது பாரம்பரியத்தில் இருந்து சத்தையும் சாரத்தையும் நாம் உள்வாங்கிக் கொள்ளவேண்டுமானால் அந்தப் பாரம்பரியமும் மரபும் காலத்திற் கேற்ற வகையில் தன்னைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். தமிழ் மரபுத் தொடர்ச்சியின்/வளர்ச்சியின் அடிப்படைக் காரணமே அந்த மரபின் உள்ளார்ந்த நெகிழ்வுத்தன்மைதான். இந்த நெகிழ்வுத்தன்மையை (flexibility) நமது மரபின் புத்தாக்கத்தை நீட்சிக்கும் ஒரு முக்கியக் காரணியாக இனம் கண்டு போற்ற வேண்டும். தமிழ் மொழியையும் தமிழ் மரபையும் தொட்டால் சுருங்கியாக ஒரு பெரிய மதில் சுவருக்குள் பிணைக் கைதியாகச் சிறை பிடிக்க வேண்டாம். பல ஆரோக்கியமான பண்பாட்டு/இலக்கிய மரபுகளை, நமக்கு வளம் சேர்க்கும் பாங்கில் வரவேற்கும், உள்வாங்கிக்கொள்ளும் பக்குவம் நமக்குத் தேவை. இந்தப் பக்குவம் நமது இலக்கிய மரபுக்கு உரத்தையும் வலிமையையும் சேர்க்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
கலீலியோ முதல் கலாம் வரை	35.00
குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்சமூலம் – ஒரு சமூகவியல் பார்வை	30.00
சங்கத் தமிழ் பகுதி 1	100.00
சங்கத் தமிழ் பகுதி 2	100.00
சங்கத் தமிழ் பகுதி 3	115.00
சங்கத் தமிழ் பகுதி 4	130.00
சங்கத் தமிழ் பகுதி 5	110.00
ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்	60.00
தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும்	160.00
இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்)	50.00
திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு	40.00
பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்	70.00
காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு	40.00
Freudism in the Novels of James Joyce and T. Jankiraman: A Comparative Study	125.00
இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்	290.00
தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு	310.00
பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும்	170.00
தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள்	185.00
மனிதப் புனிதர் கக்கன்	110.00
மொழி பெயர்ப்பு: ஒரு கவின்கலை	75.00
மூவர்தமிழ் மூன்று பார்வைகள்	50.00
காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள்	100.00
அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா–மொபசான் சிறுகதைகள்–ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று	170.00
தமிழ் நாடக மொழியும் வரலாறும்	110.00
வா.செ.கு. என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	115.00
தலித் அறம்	45.00
உலகச் செம்மொழிகள்	90.00